மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 7 / சூலை 2018 / ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி / விலை : ரூ.10/-



## பனை நாட்டிற்கு பதினொரு லட்சம்



## அணு ஆயுதங்கள் இல்லாத உலகம்

## நீட்தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவது எப்படி





கவிஞர் பெருமக்கள் திரு. முத்துலிங்கம், திரு. காமகோடியன் ஆகியோருடன்
முற்றம் ஆசிரியர் விசவனூர். வே. தளபதி.



அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் வெளியிட்டாளர் சங்கத்தின் தலைவர் லயன். டாக்டர். திரு. இராஜேந்திரன் அவர்கள்
மாண்புமிகு அமைச்சர் கடம்பூர் ராஜூ அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly July 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
**சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**
அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை– 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

பனைநாட்டிற்கு பதினொரு லட்சம்
– தலையங்கம்....4

ஆற்றோரம் – அறிஞர் அண்ணா ஆற்றிய உரை
–பெருமாள் ....5

அணு ஆயுதங்கள் இல்லாத உலகம்
– பூவுலகின் நண்பர்கள்.... 7

மக்களுக்கு மாசு அதிகாரிகளுக்கு காசு
– சைதை மணிமாறன்.... 9

நீட்தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவது எப்படி?
– பாண்டியன்.... 10

ஒன்றுபடு தமிழகமே!
– கவிஞர் காமகோடியன்.... 12

பண மழையில் பதிவுத்துறை ட்ரான்ஸ்பர் முறைகேடுகள்.... 14

தமிழர்கள் பாதுகாப்புடன் வாழ வேண்டுமென்றால்
விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் உருவாக வேண்டும்
– விஜயகலா மகேஸ்வரன்.... 18

காட்சிப்பிழை (சிறுகதை)
– எம். கலைக் கூத்தாடி ....20

போராடிப்பெற்ற செம்மொழி தமிழலால் உயர்வோம்
– பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ....23

மழை நீரைத் திறந்தவெளிக் கிணறுகளுக்குத் திருப்பும் திட்டம்
– செ. நல்லசாமி ....25

அன்புள்ள ஆசிரியர் (சிறுகதை)
– செல்லக்குமார்.... 26

பணையக் கைதிகளாகத் தமிழர்கள்
– பெ. மணியரசன் (தமிழர் கண்ணோட்டம்) ....28

கோவையில் இனி காசு கொடுத்தால்தான் தண்ணீர்
– க. அருணபாரதி (தமிழர் கண்ணோட்டம்) ....33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# பனைநாட்டிற்கு பதினொரு லட்சம்



கடந்த மே திங்கள் எனது சொந்த ஊருக்கு நான் சென்றிருந்தபோது அங்கே விவசாயம் செய்து வரும் எனது அண்ணன் பொன்முடியிடம் நுங்கு வேண்டும் என்று கேட்டேன். அவரோ பனையெல்லாம் வெட்டி கொடுத்துவிட்டோம் என்றார். ஏனென்று கேட்ட பொழுது பனை ஏறுவதுக்கு ஆளில்லை, பனையிலி ருந்து வரும் ஓலைகளும் மற்றவையும் நிலத்தை கெடுத்துவிடுகின்றன. ஆகவே கொடுத்துவிட்டேன் என்றார். யாருக்கென்று கேட்டபோது கரிமூட்டம் போடுகிறவர்களுக்கு என்றார். நூறு ரூபாய் கொடுத்தார்கள் என்றும் சொன்னார்.

பனையிருந்தால் அது தரும் பயன்கள் பல ஆயிரம் ரூபாய்க்கு இணையாக இருக்கும். ஆனால் அதன் பெருமை தெரிந்திருந்தும் ஆளில்லாத காரணத்தினால் நூறு ரூபாய்க்கு விற்றுவிடும் அவலம் நடந்து கொண்டிருக்கிறது.

பனை என்பது தமிழர்களின் அடையாளம். அந்த அடையாளத்தை நாமே தொலைத்துக்கொண்டிருக் கிறோம். அரசும் கூட இதில் சிறிதும் அக்கறையின்றி இருக்கிறது. உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் மது வகைகளை நாட்டில் அறிமுகப்படுத்தி மக்களை சீரழித்து வருகிற நிலை வருந்தத்தக்க ஒன்றாகும். அதுபோல குளிர்பான வகைகளும்கூட உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக்கூடியவனவாக இருக்கின் றன. ஆனால் பனையிலிருந்து கிடைக்கும் கள், பதநீர், கருப்பட்டி, நுங்கு, பனங்காய், பனம்பழம், பனங்கிழங்கு, மழைநீரை நிலத்தடி நீர் ஆக்குவது என்று இப்படி எத்தனையோ பயன்களைத் தரும் மரங்களை பாதுகாக்காமல் புறந்தள்ளுவது சரியான நடைமுறை யல்ல.

நாம் அமைப்பின் நிறுவனர் தந்தை ஜெகத் கஸ்பர்ராஜ் அவர்கள் பனை விதைகள் நடுவதிலே மிகவும் ஆர்வம் காட்டி ஒருகோடி பனை விதைகளை விதைக்கும் பணியை தொடர்ந்து செய்துவருகிறார். பனைநாடு என்கிற அமைப்பையும் உருவாக்கியிருக் கிறார். இவ்வமைப்பிற்கு பலரும் தோள் கொடுக்கின்ற னர்.

ஆங்கிலத்தில் AIBOC என சுருக்கமாக அறியப் படும் அனைத்து இந்திய வங்கி அதிகாரிகள் கூட்ட மைப்பு, இந்திய வங்கித்துறையின்மிகப்பெரிய தொழிற் சங்க அமைப்பாகும். இதன் தமிழகப் பிரிவு தலைவரா கவும் அகில இந்திய பொதுச்செயலாளராக வும் நீண்ட காலம் பணியாற்றியவர் திரு. ராஜேந்திர தேவ் பிராங்கோ அவர்கள். பொதுத்துறை வங்கிகள் நெருக் கடி சந்திக்கும் இக்காலத்தில் அவை பொறுப்பற்ற தனியார் கபளீகரத்திற்கு உள்ளாகாமல் காப்பாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

சென்னையில் புகழ்பெற்ற SBOA பள்ளி குழுமத்தை வளர்த்தெடுத்தவரும் இவரே. பணி ஓய்வுபெற்ற இவருக்கு பணி ஓய்வு கால காப்பூதியமாக அனைத்து இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பு ரூ. 11 லட்சத்தை வழங்கியது. இந்த பதினொரு லட்சத்தையும் ஒரு கோடி பனைவிதைகள் நடும் செயலில் ஈடுபட் டுள்ள பனை நாடு இயக்கத்திற்கு திரு. ராஜேந்திர தேவ் பிராங்கோ வழங்கியிருக்கிறார்.

நிலத்தடி நன்னீர் இருப்பு தமிழகத்தில் வேகமாக குறைந்து வருகிறது. இது மிகப்பெரும் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்காலத்தில் உருவாக்கும். இச் சூழலில் மழைக்கால உபரிநீரை இயற்கையாக அறு வடை செய்து நிலத்தடி நீர் படுகைக்கு கொண்டு சேர்க்கும் ஆற்றல் கொண்ட ஒரே மரம் பனைமரம். எனவே தமிழகத்தில் உடனடியாக பல கோடி பனை மரங்களை நடவேண்டும் என்கிறார் திரு. ராஜேந்திர தேவ் பிராங்கோ அவர்கள். ●

அறிஞர் அண்ணா அவர்கள் "ஆற்றோரம்" என்ற தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1943ஆம் ஆண்டு ஆற்றிய உரை!.

அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றச் செயலாளராக அப்போது செயலாற்றிய திரு. க. அன்பழகன் அவர்கள் அம்மன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்களை அழைத்துப் பேச முயற்சி மேற்கொண்டார். துணைவேந்தர் பொறுப்பில் இருந்த பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் அறிஞர் அண்ணா பேசுவதற்கு அனுமதி வழங்கினார்.

பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா மண்டபத்தில், கா. சு. பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றார். அவர் பேசும்போது, அண்ணாதுரை அவர்கள் ஓர் அறிஞர், சிறந்த சொற்பொழிவாளர், முற்போக்குச் சிந்தனை கொண்டவர், தமிழ்மொழி உரிமை காக்கும் கொள்கைப் பற்றுடையவர், இவர், இப்பொழுது ஆற்றோரம் என்னும் தலைப்பில் உரை ஆற்றுவார் என்று கூறினார்.

அறிஞர் அண்ணாவின் பேச்சு வரிசையின் மணிமகுடம் ஆற்றோரம். மூன்று வரலாறுகளையும் மூன்று பண்பாடுகளையும் ஒப்பாய்வு செய்த பேச்சு, மாணவர்கள் முன்னதாக தலைப்பு கொடுக்காமல் மேடையில் கொடுக்கப்பட்ட தலைப்பு, சிந்திப்பதற்கு நேரம் கொடுக்காமல் கொடுக்கப்பட்ட தலைப்பு, சில நிமிடங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டு, அண்ணாவை மாணவர்கள் சோதிக்க நினைத்த தலைப்பு, அதுமட்டுமல்ல, இதில் மற்றொரு சிறப்பும் இடம் பெறுகிறது. கொடுக்கப்பட்ட தலைப்பு 'ஆற்றோரம்' ஆற்றங்கரைகளின் இயற்கை அழகைக் குறிப்பிடுவதாக தலைப்பு இருந்தது. கரையோரத்தில் இருக்கும் சோலைகளின் எழிலைக் குறிப்பிடும் வகையில் அமைந்திருந்தது.

அண்ணா அவர்களுக்குத் தெரியும். மாணவர் களுக்குத் தேவை இயற்கை அழகல்ல, சோலைகளின் எழிலல்ல. சோலைக்குயில்களின் ஓசையல்ல, உருண்டு ஓடும் நீரின் ஒலியல்ல அவர்களுக்குத் தேவை உலகவரலாறு, வீரவரலாறு, வெற்றிவரலாறு, மனித

# "ஆற்றோரம்" அறிஞர் அண்ணா ஆற்றிய உரை



வரலாறு. ஆதலால் வேற்று நாட்டிலும் நமது நாட்டிலும் உள்ள ஆறுகளின் கரைகளில் அரசோச்சிய வர்களின் வேறுபட்ட பண்புகளைக் கருப்பொருளாக வைத்து, ஆற்றோரம் தலைப்பில் பேசினார் அவற்றின் சுவையான பகுதிகளைப் பார்ப்போம்.

ஆற்றோரம் என்னும் தலைப்பில் பேசுமாறு பணித் துள்ளீர்கள், உலகில் ஆயிரக்கணக்கான ஆறுகள் இருக்கின்றன, அத்தனையும் பேசமுடியாது. மூன்று ஆற்றங்கரையோரங்களை எடுத்துக் கொள்ள லாம் என்று இருக்கிறேன்.

முதலாவது நைல்நதி, இரண்டாவது கங்கைநதி, மூன்றாவது காவிரிநதி, உலகமெங்கும் ஆற்றரோரங் களில்தான் மனித நாகரிகம் முகிழ்த்து வளர்ந்து பரவியுள்ளது. தமிழர்கள் வகுத்த ஐவகை நிலங்களிலே ஆற்றோரங்கள் அமையுமானால் அங்கேதான் மக்கள் தொகை அதிகமாகும். நீர்வளமும் நிலவளமும் உணவு தானிய விளைச்சல் பெருக துணையாவதே காரணம்.

நைல்நதி ஆற்றங்கரையோரத்தில் அந்தோணி போன்ற மாவீரர்கள் வாழ்ந்தார்கள். பல நாடுகளை வென்றார்கள். தமது வெற்றிகளை அந்தப்புரத்தில் உள்ள அழகியர்களின் காலடிக்கு காணிக்கையாக் கினார்கள்.

கங்கை ஆற்றங்கரையோரத்தில் சந்திரகுப்தன், அசோகன் போன்ற மன்னர்கள் அரசோச்சினார்கள். அவர்களும் பல நாடுகளை வென்றதாக வரலாறு சொல்கிறது. இவர்கள் எல்லாம் தமது வெற்றிகளை அரசவையில் இருந்த சாணக்கியன் போன்றவர்களின் காலடிக்குக் காணிக்கையாக்கினார்கள்.

காவிரி ஆற்றங்கரையோரத்தில் இராஜ இராஜ சோழனும் இராஜேந்திர சோழனும் அரசோச்சி வந்தார்கள். இவர்களும் கங்கையை வென்றார்கள். கலிங்கம் வென்றார்கள். கடாரம் வென்றார்கள். இவர்கள் அந்தோனி போன்றோ, அசோகன் போன்றோ, அழகிகளிடமும் சாணக்கியர்களிடமும் தங்களின் வெற்றிகளைக் காணிக்கையாக்கவில்லை. தங்களது வெற்றிகளை பிரகதீசுவரர் கோயிலாக, கங்கை கொண்ட சோழபுரமாக, கடாரம் கொண்டானாக உருவாக்கி நிலைக்களங்களை அமைத்துள்ளார்கள்.

நிற்க, தமிழகத்தில், காவிரி, பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை எனப்பாயும் ஆறுகள், ஆந்திராவில், கிருஷ்ணா, கோதாவரி என ஆறுகள் பாயும் வெளிகளில் எல்லாம் மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டு நாகரிக வளர்ச்சி அடைந்துள்ளனர்.

ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகம், மொகஞ்சதாரோ, அரப்பா நகர அகழ் வாய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆரிய இன வருகையல் அந்த நாகரிகம் சிதைந்ததாகவும் அவ்வாறு வந்த ஆரியர்கள் முதலில் பஞ்சநதி தீரத்தில் (பஞ்சாப்) குடியேறி பின்னர் கிழக்கு நோக்கிச் சென்று கங்கைக் கரையில் குடியேறி வாழ்ந்ததாக வரலாறு கூறும்.

அதே காலத்தில் மத்திய ஆசியா மெசப்பத் தோமியாவில் யூப்ரடீஸ், டைக்ரிஸ் நதிக்கரைகளில் ஒரு நாகரிகம் சுமெர் நாகரிகம் சிறந்து விளங்கிய தாகவும், அதற்கு முன்னர் வியப்புக்குரிய பிரமிட் போபுரங்கள் எழுப்பியுள்ள நைல்நதிக்கரையில் எகிப்திய நாகரிகமும் ஏதென்ஸ் (கிரேக்க) நாகரிகமும் வளர்ந்திருந்ததாகவும் அதைத் தொடர்ந்து ரைன் நதிக்கரையில் மேற்கு ஐரோப்பிய (ஜெர்மனி) நாகரிகமும் ‘போ’ நதிக்கரையில் ரோமானியர் (இத்தாலி) நாகரிகமும் பிரிட்டானியாத்தீவுகளில் தேம்ஸ் நதிக்கரையில் ஆங்கிலோ சாக்ஸன் நாகரிகமும் டான், டான்யூப் நதிக்கரை நாகரிகமும் வேல்கா நதிக்கரையில் வளர்ந்துள்ள சோவித் நாகரிகமும் யாக்ஸ்டீக்கியாங் (மஞ்சள்) நதிக்கரையில் வளர்ந்த சீன நாகரிகமும் செளரி மிசிசிப்பி நதிக்கரையிலுள்ள செவ்விந்தியப் பழங்குடி நாகரிகமும் வடஅமெரிக் காவில் பாய்ந்தோடும் நதிக்கரை நாகரிகமும் என ஆங்காங்கே நிலைத்து வாழ்ந்த மக்களிடம் வளர்ந்த நாகரிகம் பலப்பல.

அவற்றுள்ளம் நீண்ட நெடுங்காலம் முன்னரே மொழிகண்ட இலக்கியம் வளர்த்து, நாகரிகம் சிறந்து, நல்லாட்சி நடத்தி வணிகத்தில் வளம் பெருக்கி வாழ்ந்த மக்கள் தமிழர்கள்.

திருக்குறள் தோன்றுவதற்கு ஏதுவான பண்பாடு வளர்ந்த இனம். அகமும் புறமும் பிறப்பதற்கு ஏதுவான நாகரிகம் வளர்த்த இனம், கங்கைக்கரையில் ஆரியர்கள் குடியேறும் முன்னரே அகில இந்தியாவிலும் பரவி வாழ்ந்த இனம் தமிழினம். அதனால்தான், வரலற்று அறிஞர் வில்லியம் ஸ்மித் அவர்களும் மனோன் மணியம் படைத்த பேராசிரியர் சுந்தரனாரும் இந்தியா வின் வரலாற்றை வரைபவர்கள், அதனை குமரிமுனை யில் தொடங்கி வரைந்தால்தான் அது நிறைவுடை யதாகும் என்றனர்.

அப்படிப்பட்ட காவிரக்கரை நாகரிகத்துக்கும், திராவிட நாகரிகத்துக்கும் உரியவர்களாகிய நாம், நமது இன, மொழி, பண்பாட்டுச் சிறப்பைக் காத்திட உறுதி கொள்ள விரும்புகிறேன் என்று ஒவ்வொரு நாகரிகத் தின் சிறப்பும் புலப்பட விளக்கியுரைத்து உரையாற்றி னார்.

**பெருமாள்,**
அண்ணாநகர் தமிழ்ச்சங்கம்,
9500930460.

# அணு ஆயுதங்கள் இல்லாத உலகம்

## பூவுலகின் நண்பர்கள்

அணு ஆயுதங்கள் இல்லாத உலகம் அமைய நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தாலும் இன்றைக்கு அமெரிக்க அதிபரும் வட கொரிய அதிபரும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை வரவேற்கிறோம்.

உலகப்புகழ் பெற்ற இயற்பியலாளர் ஸ்டீவன் ஹாக்கிங்ஸ் இந்த உலகத்தை அச்சுறுத்தக்கூடிய மூன்று விசயங்களில் பிரதானமாக கூறியது அணு ஆயுதங்களை. இவ்வுலகத்தில் தற்போது சுமார் 15,000 அணு குண்டுகள் உள்ளன. அவை அனைத்தும் ஹிரோசிமா, நாகசாகி மீது போடப்பட்ட குண்டு களை விட பல்லாயிரம் மடங்கு சக்தி வாய்ந்தவை. ரசியா, அமெரிக்கா இந்த இருநாடுகள் மட்டும் சுமார் 1,800 அணு ஆயுதங்களை ஆயத்த நிலையில் நிறுத்தி யுள்ளன. சமிக்கைகள் கிடைத்த சில நிமிடங்களுக்குள் இவற்றை ஏவக்கூடிய வகையில் நிலை நிறுத்தியுள்ளன.

உலகம் முழுவதும் பல்வேறு அமைப்புகள் அணு ஆயுதங்களுக்கு எதிராக செயல்பாடுகளை செய்து வருகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானதாக ‘ஐகேன்’ அமைப்பிற்கு இந்த ஆண்டிற்கான அமைதிக் கான நோபல் பரிசு கிடைத்துள்ளது எல்லோரும் அறிந்ததே.







கடந்த பல ஆண்டுகளாகவே வட கொரியா அணு குண்டு சோதனைகளை செய்து அணு ஆயுத உற்பத்தியில் கவனம் செலுத்தி வந்தது உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளை கவலைக்கு உள்ளாக்கியது. அமெரிக்கா மீது தீரா பகை கொண்ட வடகொரியா அமெரிக்கா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்துவ தற்காக அதிகதூரம் செல்லக்கூடிய ஏவுகணைகள் பலவற்றை சோதனை செய்வதும், அதற்குப் பதிலடி யாக அமெரிக்கா எப்போதும் தயார்நிலையில் இருப்பதாகவும் மாறி மாறி சொற்போர்கள் நடந்து கொரிய தீபகற்பத்தை கொதிநிலையில் இருக்க வைத்தது.

இந்நிலையில் தென்கொரிய அதிபரின் முயற்சியால் சில மாதங்களுக்கு முன்னர் வடதென் கொரிய அதிபர்கள் சந்தித்தது. நம்பிக்கைக் கீற்றை வெளிப் படுத்தியது. இந்நிலையில் சிங்கப்பூர் நாடு அமெரிக்க அதிபரையும் வடகொரியா இடையேயான உச்சிமா நாட்டை நடத்துவதற்கு சம்மதித்து இரு நாட்டு அதிபர்களும் சந்தித்தார்கள்.

வடகொரியா மற்றும் அமெரிக்க அதிபர் களிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றதாகவும், இரு நாடுகளுக்கிடையே உள்ள பரஸ்பர நல்லெண்ண உறவுகள் தொடரும் என்று இரு நாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தின்படி, வடகொரியா அணு ஆயுதங்கள் முழுவதையும் செயலிழக்கச் செய்யப்படும் என்று உறுதிமொழிஅளித்துள்ளது. அதற்கு, அமெரிக்கா, வட கொரியாவின் பாதுகாப்பிற்கு முழு உத்தரவாதத்தையும் அளித்துள்ளது. மேலும் இரு நாடுகளுக் கிடையே இரண் டாம் கட்ட அதிகாரிகள் தொடர்ச்சியாக பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

வட கொரியா தன்னிடம் உள்ள அணு ஆயுதங் களையும் அதிகதூரம் செல்லும் ஏவு கணைகளையும் செயலிழக்க ஏற்றுக் கெண்டதை வரவேற் கிறோம். அதே நேரத்தில் உலகத்திலேயே அதிக அணு குண்டுகள் வைத்திருக்கும் அமெரிக்காவும் இது குறித்த நகர்வுகளை அறிவித்திருக்க வேண்டும். அமெரிக்காவின் 'பெரியண்ணன் மனோபாவம்' இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

அதிகாரபூர்வமாகப் பார்த்தால் இப்போதும் வட மற்றும் தென் கொரியா நாடுகளுக்கிடையே இப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி உள்ள சூழலிலேயே இரு நாடுகளும் பேசி அணு ஆயுதங்களை செயலிழக்க செய்வதை உலகம் மகிழ்ச்சி யுடன் வரவேற்கிறது.

அணு ஆயுதங்கள்தான் தேச எல்லைகளைப் பாதுகாக்கும் என்பதெல்லாம் வழக்கற்றுப்போன வாதங்கள் என்பதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் துவங்கியுள்ளன. உலகத்திலுள்ள 195 நாடுகளில் 9 நாடுகள் மட்டுமே அணு ஆயுதங்கள் வைத்துள்ளன. அப்படி என்றால் மற்ற 186 நாடுகளை வேறு ஏதாவது நாடு சென்று ஆக்கிரமிக்கிறதா? மற்ற நாடுகள் பாதுகாப்பாகத்தான் உள்ளன என்கிற உணர்வும் நாடுகளிடையே உள்ளது.

இதைப்போலவே கூடிய விரைவில் இந்திய நாட்டின் பிரதமரும் பாக்கிஸ்தான் அதிபரும் சந்தித்து, இரு நாடுகளிடமும் உள்ள அணு ஆயுதங்களை குறைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று கோருகிறோம்.

அணுசக்தியும் மானுட சமூகமும் ஒன்றாக வாழமுடியாது என்பதை எல்லா நாடுகளும் நினைவில் கொள்ள வேண்டும். ●

# மக்களுக்கு மாசு அதிகாரிகளுக்கு காசு

தமிழ்நாட்டில் மாசுகட்டுப்பாட்டு வாரியம் செயல்படுகிறதா என்ற கேள்வி பலநேரங்களில் எல்லா இடங்களிலும் கேட்டுக்கொண்டே இருக்கிறது. உலகத்தின் மாசு என்பது மிகப்பெரிய சவாலாக இருந்து வருகிறது.

வல்லரசு நாடுகள் கூட அவரவர் நாடுகளில் உண்டாக்கப்படும் கழிவுகளை தங்களின் எல்லைக்கு அப்பால் உள்ள கடல்களில் கப்பல் கப்பலாக கொட்டும் மாந்தநேயத்தை? செய்து காட்டி வருகின்றனர். வல்லரசு நாடுகளின் கழிவுப்பொருட்கள் இந்திய துணைக்கண்டத்திலும் கொட்டப்படுவதை அறிகிறோம்.

கழிவுகளால் மனித சமூகத்திற்கு பெரும் கேடு உண்டாகும் என்று அறிந்தும் கூட, தங்களது கழிவுகளை பிறரின் மீது திணிப்பது மிக மோசமான அயோக்கியதனமாகும்.

ரஷ்யாவின் துணையோடு கூடங்குளத்தில் அணுமின் நிலையங்கள் கட்டப்பட்டபோது, அணுக் கழிவுகளை கர்நாடக மாநிலத்தில் புதைப்பதற்கு அந்த மாநிலம் எதிர்ப்பு தெரிவித்து அதை தடுத்தது. இந்தியாவிற்கு மின்சாரத்தை கொடுக்கிற ஒரு நிறுவனம் அதன் கழிவுகளை இந்தியாவின் வேறு மாநிலத்தில் புதைக்கக்கூடாது என்று எதிர்ப்பு இருக்கிறபோது தமிழ்நாடு மட்டும் அழிவுக்கான எல்லா கழிவுளையும், தனக்குள்ளே புதைத்துக் கொள்ள வேண்டுமென்பது அறமாகுமா?

கேரளத்தினர் மருத்துவக்கழிவுகளை, தமிழகத்தின் எல்லைப்பகுதியில் யாருக்கும் தெரியாமல் கொட்டிவிட்டு, தமிழர்களுக்கு நோயை இலவசமாக கொடுத்துவிட்டு செல்கின்றனர்.

ஜூன் மாதம் இறுதியில் திருநீர் மலைப்பகுதியில் சிலர் லாரியிலிருந்து, ரசாயனக் கழிவுகளை வெளியேற்றிக் கொண்டிருந்தனர். அதை நாம் படம் பிடிக்க முயன்றபோது கழிவுகளை வெளியேற்றுவதை நிறுத்திவிட்டு, உடனே புறப்பட்டு விட்டனர்.

கழிவுகளை மீண்டும் சுத்திகரிப்பது, திடக்கழிவுகளை மறுசுழற்சிக்கு பயன்படுத்துவது, திரவக்கழிவுகளை, அதேபோன்று சுத்திகரித்து பயன்படுத்துவதும் நடைமுறையில் இருப்பதை யாரும் கண்டுகொள்வதில்லை. சுத்திகரிப்பிற்கு பணம் செலவாகும் என்ற நிலையில் கழிவுகளை அப்படியே வெளியே கொட்டிவிட்டு செல்வது, மனித உயிர்களுக்கு மட்டுமல்லாது, மண்ணில் வாழும் உயிரினங்களுக்கும் மிகப்பெரிய கேடாகும்.

கடந்த 28618 அன்று நியூஸ் சேனல் தொலைக் காட்சியில் 7மணிக்கு நடைபெற்ற விவாத மேடையில் உள்ளாட்சி அமைப்புகளின் தனி அதிகாரிகளுக்கான பணிக்கால நீட்டிப்பு பற்றி விவாதிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற I.A.S அதிகாரி திரு. முருகன் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், பல்வேறு தவறுகள் நடக்கிறது என்று கூறினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக கையூட்டு என்பது சமுதாயத்தை, உள்ளாட்சி அமைப்புகளை சீர்குலைத்து கொண்டிருக்கிறது என்றார். சரியான நிர்வாகம் இல்லாததால், கழிவுகள் ஆறுகளிலும், குளங்களிலும், விளைநிலங்களிலும், கொட்டப்பட்டு, மனித வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக மாறிக்கொண்டிருக்கிறது.

மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தமிழக அரசு, சுகாதாரத்துறை, இவைகளெல்லாம் கழிவுகளை கண் காணித்து ஒழுங்கு முறைப்படுத்தினால், தமிழகத்தை கழிவு அழிவுகளிலிருந்து காத்துக்கொள்ள முடியும்.

**சைதை. மணிமாறன்**





ஏழைகளில் யாருக்காவது என்றைக்காவது மருத்துவக் கல்வி கிடைக்கும் என்று இருந்தது முற்றிலுமாக மாறி இன்றைய அரசுகளால் மருத்துவம் ஏழைகளுக்கு எட்டாக் கனியாகிப் போய்விட்டது.

நம் நாட்டில் மட்டும்தான் பல ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களையும் பயிற்சி பெறாதவர்களையும் ஒரே வரிசையில் நிற்க வைத்து, போட்டியில் ஓட வைக்கிறார்கள்.

கடந்த நீட் தேர்வில் சென்னையைச் சேர்ந்த ஒரு மாணவி இந்தியாவில் 12வது இடத்திற்கு வந்திருக்கிறார். அந்த மாணவியின் தந்தையும் தாயும் மருத்துவர்கள். அந்த மாணவியை நீட் தேர்வுக்கு பயிற்சி தரும் பயிற்சி நிறுவனத்தில் பல லட்சம் கொடுத்து படிக்க வைத்திருக்கிறார்கள்.

ஆனால், நாட்டுப்புறங்களில் இருக்கும் மாணாக்கர்கள் பள்ளிக்குச் செல்கிற போதே பாதி வயிறு நிரப்பி, பசியோடுதான் செல்கின்றனர். அதுமட்டுமல்லாமல் இரண்டு மூன்று கிலோமீட்டர் நடந்து பள்ளிக்குச் சென்று, ஆசிரியர்கள் நடத்தும் பாடத்தை மட்டும் படித்து மறுபடியும் பசியோடும் களைப்போடும் வீடு வந்து சேர்கின்றனர். அதுமட்டுமல்லாமல் வீடு வந்தபின் வயல் வேலைகள் வீட்டு வேலைகள் என்று இரவு வரை வேலை செய்கின்றனர். இவ்வளவு சிக்கல்கள் மத்தியிலும் பன்னிரெண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று வென்றாலும் கூட

# நீட் தேர்வில்

## அதிக மதிப்பெண் பெறுவது எப்படி?

மருத்துவம் படிக்க இயலாது என்ற அவலநிலை இன்று இந்தியாவில்.

மருத்துவப்படிப்புக்கான கேள்விகள் பன்னிரெண்டாம் வகுப்பு பாடங்களில் இடம் பெறுவதில்லை. அந்தக் கேள்விகள் எல்லாம் வசதி படைத்தவர்கள் படிக்கும் பாடத்திட்டங்களில் மட்டுமே உண்டு. இப்படிப்பட்ட பாடத்திட்டங்கள் இருப்பதே தெரியாத மாணவர்களை புறந்தள்ளும் முறையில் நீட் என்ற ஒரு தேர்வைக் கொண்டு வந்து, மருத்துவராகும் நினைவில் இருக்கும் நாட்டுப்புற மாணவர்களை அதல பாதாளத்தில் தள்ளி விடுகின்றனர்.

தொடக்கம் முதல் பயிற்சி பெற்றவனையும், பயிற்சியே பெறாதவனையும் ஒரு போட்டியில் நிற்க வைத்து, ஒரே எல்லையைத் தொட வேண்டும் என்று ஓட்டப் போட்டி வைத்தால் என்ன முடிவு கிடைக்குமோ அந்த முடிவுதான் நீட் தேர்விலும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

முன்பெல்லாம் பல தனியார் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பாடத்திட்டத்தை பதினோராம் வகுப்பிலும் பயிற்றுவித்து, பன்னிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற வைத்து மோசடி செய்து கொண்டிருந்தனர். அதைத் தடுப்பதற்காகத் தான் பதினோராம் வகுப்புத் தேர்வும் பொதுத்தேர்வு என்று அறிவிக்கப்பட்டது.

அந்த பழைய மோசடியை விட நீட் மோசடி மிகப்பெரிய மோசடியாக இருக்கிறது. நீட் தேர்வுக்கென எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் படிக்கலாம். பணம் உள்ளவர்கள் மருத்துவராகலாம் என்ற நிலையில்தான் நீட் தேர்வு உள்ளது.

ஒரு திட்டம், செயல்முறைக்கு வருகிறது என்றால், அதற்கான முதல்நிலை வேலைகள் எல்லாவற்றையும் சரிசெய்த பிறகே அந்தத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். அப்போதுதான் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அந்தத் திட்டத்தின் நன்மை சென்று சேரும். அதுபோல, அனைத்து மாணவர்களும் படிக்கும் பாடத்திட்டத்தை தேசியப் பாடத் திட்டமாக மாற்றி, அதன்பின் மருத்துவப் படிப்புக்கான போட்டித் தேர்வை வைப்பதே சரியான செயல்முறைத் திட்டமாக இருக்கும்.

தற்போது உள்ள முறை, பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே மருத்துவப்படிப்பு படிக்க முடியும் என்ற நிலையில்தான் உள்ளது. நீட் தேர்வு முறை நேர்மையானதாக இருக்க வேண்டுமென்றால் அனைத்து மாணவர்களும் படிக்கும் பாடத்திட்டத்தில் நீட் தேர்வில் கேட்கப்படும் கேள்விக்கான பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

நீட் தேர்வுக்கான தனியார் பயிற்சிப் பள்ளிகளை மூட வேண்டும். நாட்டுப்புற மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே கல்வி சமநிலையில் கற்பிக்கப்பட்டு இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சரிசமமான உயர்வுகள் கிடைக்கும்.

**———— பாண்டியன்**

## பத்திரிகையாளர் குடும்பத்தின் குடும்ப உதவி நிதி ரூ.3. லட்சம் வரை உயர்வு

### சட்டசபையில் அமைச்சர் கடம்பூர் ராஜு அறிவிப்பு

பணிக்காலத்தில் இறக்கும் பத்திரிகையாளர்களுக்கு, பணியாற்றிய காலத்துக்கு ஏற்றவாறு ரூ.50 ஆயிரம் முதல் ரூ.2 லட்சம் வரை குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டது. அந்த தொகை ரூ.75 ஆயிரம் முதல் ரூ.3 லட்சம் வரை உயர்த்தி வழங்கப்படும்.

பத்திரிகையாளர் 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.75 ஆயிரமாகவும் 10 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ஒரு லட்ச ரூபாயிலிருந்து ரூ.1.50 லட்சம் ஆகவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.1.50 லட்சத்தில் இருந்து ரூ.2.25 லட்சம் ஆகவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.2 லட்சத்தில் இருந்து ரூ.3 லட்சம் ஆகவும். முதல்–அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்ப நிதி உயர்த்தி வழங்கப்படும்.

•


## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுபக்கம்)**

**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுபக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ.** 5,000/- **(முழுபக்கம்)**

**கவிஞர் காமகோடியன்**



# ஒன்றுபடு தமிழகமே!

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று மகாகவி பாடினார். இன்றைய செந்தமிழ் நாட்டை அப்படிப் பாடினால் நாக்கு சுளுக்கிக் கொள்ளுமோ என்று அச்சமாக இருக்கிறது.

வைகையும் காவிரியும் வறண்டு கிடக்கின்றன. நதியின் மணல், அதுவும் களவாடப்படுகிறது. ஏரிகளும், குளங்களும் ஆக்கிரமிப்புகளால் அவதிப்படுகின்றன.

தமிழகத்தின் சுவாசம் விவசாயம். அது மூச்சுத் திணறலால் முடங்கிக் கிடக்கிறது. “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்றார் வள்ளலார். இன்று பயிர் மட்டும் வாடவில்லை. விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

கனமழை பெய்யும் காலங்களில் எவ்வளவோ தண்ணீர் கடலில் வீணாகக் கலப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மழை நீர் வந்து மடி நிரப்பும் குளங்களையும், ஏரிகளையும் நாம் பாதுகாக்கத் தவறிவிட்டோம். இந்த அவலங்களுக்கெல்லாம் காரணம், அண்டை மாநிலத்தவரோ, அந்நிய தேசத்தவரோ இல்லை. “தீதும் நன்றும் பிறர் தர வாரா“ என்பதைப் போலல் நம்மால்தான் நாடு சிதிலப்பட்டுக்கிடக்கிறது.

இந்த வேதனைகளுக்கெல்லாம் நமது மெத்தனமும் காரணம், இதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் நீ தான் காரணம். நீயேதான் காரணம் என்று ஒருவருக்கொருவர் வசைபடாமல், நாம் விழித்துக் கொண்டு செயல்பட வேண்டிய நேரமிது.

நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை“ என்ற கண்ணதாசனை நினைவுகூர்ந்து எதிர்கால நம் சந்ததியினர் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும், வாழ வழிவகை செய்ய வேண்டும். ஒத்தக் கரும்பை ஒடித்துவிடலாம் கட்டுக் கரும்பை ஒடிக்க முடியாது என்று பாலபாடத்தில் படித்த நாம் தமிழகத்திற்கு நாங்களே காவலர்கள் என்று முழங்குகிறோம் தனித்தனியாக.

எனவே, நாட்டை நேசிக்கும் தலைவர்களே! தமிழகத்தை திருப்பணி செய்ய அனைவரும் ஒன்று சேருங்கள். லட்சக் கணக்கான தொண்டர்களை செயலில் இறங்கச் செய்யுங்கள். அதேபோல் லட்சக் கணக்கான ரசிகர்களை குவித்திருக்கும்

பெரிய நடிகர்களே உங்கள் ரசிகர்களை செந்தமிழ் நாட்டின் உந்து சக்தியாக செயல்பட வழி காட்டுங்கள்.

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை பத்தா யிரத்துக்கும் மேலான குளங்கள் ஏரிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அனைவரும் ஒன்று கூடி, அனைத் தையும் தூர்வாரி ஆழப்படுத்தினால், பூமிக்குள், சேமிக்கும் மழை நீர் நமது பயிருக்கும் உயிருக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

அவை போக விளையா நிலங்களில் புதுப்புது குளங்கள், ஏரிகளைப் படைத்து விவசாய நிலமாக மாற்ற வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் பசி ஆற்றாது. நாம் கூட்டுச் சுரைக்காயாக மாற வேண்டும். இனிமேல் நமக்கு செயல் செயல் செயல் மட்டுமே.

நாட்டு நலனில் அக்கறையுள்ள இளைஞர்கள், மாணவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் ஒன்று சேர்ப்போம். மாவீரன் நெப்போ லியன் சொன்னார்.

உனது இடது காலை முன்னே வை. வலது கால் தானே வரும் என்று. நாம் இடது காலாகச் செயல் படுவோம். வலது காலாக அரசாங்கமும் இணைந்து கொள்ளும். அனைத்துப் பணிகளையும் ஒரு அர்ப் பணிப்போடு செய்தால் ஆலயத்திருப்பணிபோல், தமிழகத் திருப்பணியும் தலை நிமிர்ந்து ஒளிரும்.

நமது தமிழகத் தலைவர், தமிழர்கள் மீதும் தாய்மொழி மீதும் மிகவும் பற்றுக்கொண்டவர்கள்.

தனிமரம் தோப்பாகாது, உருவிற்பெருமரம் காடாகாது என்பதை உணர்ந்தவர்கள். வேகம், விவேகம் நிறைந்த தமிழகத் தலைவர்களே ஒன்று கூடுங்கள். தொண்டர்களை ஊக்கப்படுத்தி ஆக்க வேலைகளில் செயல்படச் செய்யுங்கள்.

ஒற்றுமையின் வலிமையை உணர்ந்தவர்கள் நாம், பிரிந்து கிடந்து சரிந்து விழாமல் ஒன்று பட்டு தமிழகத்தை உயர்த்த வேண்டும். வருகின்ற காலங் களில் ஒற்றுமைதான் நம்மை வாழ வைக்கும்.

தயக்கம் தடைக்கல். அந்த தடைக்கல்லை உடைத் தெறிவோம். நல்ல காரியத்தை தள்ளிப் போடாமல் உடனே செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

தலைவர்கள் நினைத்தால் தமிழகம் உயரும். தொண்டர்கள் உழைத்தால் அனைத்து நலங்களும் நம்மை வந்து சேரும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற ஒற்றுமை மந்திரத்தை மனதில் ஓதி ஒன்றுபடு வோம். வாழ்க தமிழகம்...வளர்க தமிழ்! •

# வாழ்க்கைத் தத்துவம்...!

“ஆதரவற்ற வார்த்தையும் ஆணிகடவாத மரமும் பயனில்லை“ என்பது ஒரு நல்ல பழமொழி. இது பிறருக்குப் பயன்படாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையே அல்ல என்பதை எடுத்துரைக்கும் பழமொழியாகும்.

ஒருவர் துன்பப்படுகிறபோது உதவுவதுதான் மனித இயல்பு. உதவாவிட்டாலும் உறுதுணையாக இல்லாவிட்டாலும், ஆதரவான வார்த்தைகளையாவது துன்பப்படுகின்றவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். ஆனால், அப்படிச் சொன்னால் நம்மிடம் ஏதாவது உதவி கேட்பார்களோ? நாம் அவர்களுக்காக ஏதாவது செலவிட வேண்டியது வருமோ? என்று நினைத்து சிலர், பட்டும் படாமலும் பேசுவர். அப்படிப்பேசும் ஆதரவற்ற வார்தையால் துன்பப்படுபவர்களுக்கு எந்தப்பயனும் கிட்டாது.

எனவேதான் அவ்வாறு ஆதரவற்ற வார்த்தைகளைப் பேசுபவர்களை, ஆணி இறங்காத மரத்திற்கு ஒப்பிட்டு உவமை சொல்லி வைத்தார்கள். அந்தப் பழமொழிதான் ஆதரவற்ற வார்த்தையும் ஆணி இறங்காத மரமும் பயனில்லை என்பதாகும்.

நாம் பார்க்கலாம், வீடு கட்டுகிறபொழுது மரச்சட்டங்கள், மரக்கதவுகள் நிலைவைக்கும் பொழுது பதிப்பர். அப்படி கதவுகள் மற்றும் மரச்சட்டங்கள் தனித்தனியாக இருந்தால் பயனில்லை. அவை ஒன்றோடொன்று இணைந்து கொள்ள ஆணி அடிக்க வேண்டும். ஆணி மரச்சட்டத்தில், மரக்கதவில் இறங்கி உள்ளே செல்லாவிட்டால் அந்த மரத்தால் ஏதும் பயனில்லை.

வெடித்த மரங்கள், இறுகிய வைரம்பாய்ந்த மரங்களில் ஆணி இறங்காது. சாதாரண மரஅலமாரி செய்வதாக இருந்தால்கூட மரச்சட்டங்களை இணைக்க, மரப்பலகைகளை இணைக்க ஆணி இறங்க வேண்டுமல்லவா?

இந்தப் பழமொழியின் வாயிலாக, நாம் மற்றவர்களுக்குப் பயன்படும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நல்ல கருத்தை நம் முன்னோர்கள் நமக்கு உணர்த்திச் சென்றிருக்கின்றார்கள். மேலும், பிறர் பயன்பட நாம் வாழ்வதுதான் நாம் இந்தச் சமூகத்திற்குச் செய்யும் மிகப்பெரிய தொண்டு ஆகும்!

அன்புடன்,

**பெருமாள்,** அண்ணாநகர் தமிழ்ச்சங்கம்.
95009 30460.

பத்திரப் பதிவுத்துறையில் சார்பதிவாளர்கள் அலுவலகங்களில் மூன்றாண்டு பணி முடித்த சார் பதிவாளர்களை பத்திரப்பதிவுத்துறைத் தலைவரும் (ஐ.ஜி) இரண்டாண்டுகள் பணி முடித்த மாவட்டப் பதிவாளர்களை ஐஜியின் பரிந்துரையின் பேரில் அரசும், ஆண்டுதோறும் வேறு அலுவலகங்களுக்கும் மாவட்டங்களுக்கும் மாற்றப்பட வேண்டும். இதில் அந்த அலுவலகத்தில் கிடைக்கும் மேல் வருவாயைப் பொறுத்து லகரங்களில் தொடங்கி கோடி வரை முதலீடு செய்ய போட்டி போட்டு ஏலம் கேட்க படை யெடுக்கும் சார்பதிவாளர்கள் தயாராகி வருவதாகச் சொல்லப்படுகிறது.

தமிழகத்தில் சொத்துப் பத்திரங்களை பதிவு செய்ய 568 சார்பதிவாளர் அலுவலகங்களும் அதனை முறையாக கண்காணிக்க 50 நிர்வாக மாவட்டப் பதி வாளர்கள், 50 தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலு வலகங்களும் 9 மண்டல அலுவலகங்களும் இயங்கு கின்றன. மேற்கண்ட அனைத்து அலுவலகங் களையும் கண்காணிக்க சென்னையில் பதிவுத்துறைத் தலைவர் தலைமையில் பதிவுத்துறை தலைமை அலுவலகம் உள்ளது. அதில் 35 கண்காணிப்பாளர்கள், 10 க்கும் மேற்பட்ட மாவட்டப் பதிவாளர்களும் 4 கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்களுடன் பதிவுத்துறை செயல் படுகிறது.

பதிவுத்துறையில் மூன்று வகையான அதிகாரிகள் உள்ளனர். விலையைத் தெரிவித்து குற்றங்களைச் செய்வோர் முதல் ரகம். தவறான டாக்குமெண்ட்களை பதிவு செய்ய மாட்டேன். உன்னால் முடிந்ததைக் கொடுத்தால் கொடு என்போர் இரண்டாவது ரகம். பதிவுப் பணியும் வேண்டாம், கையூட்டும் வேண்டாம் என்போர் மூன்றாவது ரகம். இதில் முதல் ரக அதிகாரிகள் தொடர்ந்து பதிவுப் பணியைக் குறிவைத்த பெரிய அலுவலகங்களில் பதவி பெற்று, பண மழையில் நனைகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் பிரச்சினை களில் சிக்குவதே இல்லை. அப்படியே சிக்கினால் சில்லரையைச் செலவழித்து தப்பிவிடுவார்களாம். இரண்டாவது ரக அதிகாரிகளோ தெரிந்தே தவறு களைச் செய்ய முடியாதவர்களகவும் உருவாக்கப்படும்



# பண மழையில் பதிவுத்துறை
# ட்ரான்ஸ்பர் முறைகேடுகள்

பிரச்சினைகளில் எளிதாக சிக்கிச் சீரழிவதாகவும் சிலர் அகால மரணம் அடைவதாகவும் சொல்லப்படுகிறது. பிரச்சினைகளின் ஊற்றுக் கண்களான சார்பதிவளார் அலுவலகங்களுக்கு மூன்றாவது ரக அதிகாரிகள் வரலமலே தப்பி விடுவதாகவும் ஓய்வு பெற்ற ஒருவர் ஆதங்கத்துடன் தெரிவிக்கிறார்.

பதிவுத்துறையைச் சீர்படுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது ரக அதிகாரிகள் அனைவரையும் சார்பதி வாளர் அலுவலகங்களில் நியமித்து, முறைகேடுகளுக்கு விலை நிர்ணயித்து விற்கும் முதல் ரக அதிகாரிகளை முற்றிலும் நிர்வாக பணிகளில் நியமித்தால் மட்டுமே பதிவுத்துறை இலவசமும் அல்லாத துறையாக மாற கொஞ்சமாவது வாய்ப்பு உள்ளதாக ஓய்வு பெற்ற உயர் அதிகாரி தெரிவிக்கிறார்.

**ஜெனரல் ட்ரான்ஸ்பர்**

இதில் சென்னை உள்பட சில நகரங்களில் உள்ள முக்கிய அலுவலகங்களில் சார்பதிவாளர்களாக பணிபுரிய மாவட்டப்பதிவாளர்கள் அனுமதிக்கப்படு கின்றனர். அதில் அண்ணாநகர், சைதாப்பேட்டை, மயிலாப்பூர் போன்றவை அடங்கும். பத்திரப் பதிவுத்துறையில் சார்பதிவாளர்கள் அலுவலகங்களில் மூன்றாண்டு பணி முடித்த சார்பதிவாளர்களை பத்திரப் பதிவுத்துறைத் தலைவரும் (ஐஜி) இரண்டு ஆண்டுகள் பணி முடிந்த மாவட்டப் பதிவாளர்களை ஐஜியின் பரிந்துரையின் பேரில் அரசும் ஆண்டு தோறும் வேறு அலுவலகங்களுக்கும் வேறு மாவட்டங் களுக்கும் மாற்றப்பட வேண்டும். மற்ற துறைகளில் இந்த பொது மாறுதல் வழக்கமான நடைமுறையாக உள்ளபோதிலும் பதிவுத்துறையில் இது எம் எல் ஏ., எம். பி., சீட் வாங்குவது போல என சொல்லப்படுகிறது.

பதிவுத்துறையில் இந்த பணியிட மாறுதலின்போது கடைபிடிக்க வேண்டிய வரையறுக்கப்பட விதி முறைகள் உள்ளன. அவைகளில் முக்கியமானது, ஒரே அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலும் ஒரே மண்டலத்தில் 9 ஆண்டுகளுக்கு மேலும் பதிவுப்பணி, நிர்வாகப் பணியில் அனுமதிக்கப்படக் கூடாது. லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடவடிக்கைக்கு உள்ளான வர்கள், கடுமையான குற்றம், நீதிமன்ற கண்டனங் களுக்கு உட்பட்ட அலுவலர்கள் பதிவுப்பணியில் பணி புரிய அனுமதிக்கப்படக் கூடாது. ஆனால் மேற்கண்ட அனைத்து விதிமுறைகளும் பதிவுத்துறை பொது மாறுதலின் போது அனைவருக்கும் பொருத்துவது இல்லை. பலர் ஒரே மாவட்டத்திலேயே 20 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிவது தொடர்கிறது. அவர்கள் வழங்கும் விட்டமின் 'ப' வை பொறுத்தும் பதிவுத்துறை தலைமை அலுவலகத்தில் அவர்களது லாபியை பொறுத்தும் கடந்த காலங்களில் மீறுவது வழக்கமாக இருந்தது. ஆனால் கடந்த ஆண்டில் கூடுதலாகவும் இந்த ஆண்டு அவை அப்பட்டமாக மீறப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

மாவட்டப்பதிவாளர் நிலை சார்பதிவகங்களில் மாவட்டப் பதிவாளரே 2 ஆண்டுகளுக்கு மேல் ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தில் பணி தொடர முடியாது என்ற விதி உள்ளபோது 4 17 (பி) குற்றச் சாட்டுக்கு உள்ளான சார்பதிவாளர் ஒருவர் 2013 ஆம் ஆண்டு திருவள்ளூர், 2015 இல் வாலாஜாபாத், 2017 இல் திருவெற்றியூர் சார்பதிவகங்களுக்கு ட்ரான்ஸ் பரில் மாறியவர் அந்தந்த அலுவலகங்களில் ஓரிரு நாட்கள் மட்டுமே வேலை செய்துவிட்டு, மண்டல துணைப்பதிவுத் துறைத் தலைவர் மூலம் தற்காலிக ஏற்பாடு என்ற பேரில் 3 முறை டெபுடேசன் ஆணை பெற்று பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் சார் பதிவளார் அலுவலகத்தில் தொடர்ந்து 6 ஆண்டுகள் பதிவுப் பணியை ஒரே அலுவலகத்தில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு வருகிறார். இந்த விதிமீறல் பதிவுத்துறை வரலாற்றிலேயே இதுவரை யாருக்கும் காட்டப்படாத உச்சபட்ச சலுகை என மாநிலம் முழுவதும் பேசப்படுவதாகச் சொல்லப்படு கிறது.

அதே போன்று மூன்று முறை இலஞ்ச ஒழிப்புத் துறை சோதனைக்கு உட்பட்ட திண்டுக்கல் சார் பதிவாளர் தொடர்ந்து பதிவுப் பணியில் உள்ளதோடு, தற்போது ஒரு பெரிய அலுவகத்திற்கு 'உரிய முறையில்'? முயற்சி செய்துள்ளதாகவும் இலஞ்ச ஒழிப்புச் சோதனைக்கு உட்பட்டு உள்ள ஒசூர் சார்பதிவளார் தொடர்ந்து பதிவுப் பணியில் உள்ளதோடு தற்போது சேலம் சூரமங்கலத்திற்கு 'உரிய முறையில்'? முயற்சி செய்துள்ளதாகச் சொல்லப்பகிறது.

மனநிலை சரியில்லாதவரை நிலம் விற்பனை செய்ய அனுமதித்தது. திருமண வயதை அடையாத பெண் திருமணத்தை பதிவு செய்தது என கடுமையான குற்றங்களைச் செய்ததை நீதிமன்றமே உறுதி செய்து சாட்டையைச் சுழற்றியதாகச் சொல்லப்படும் ஒரு சார்பதிவாளர் தடையின்றி மூன்றாண்டுகள் பதிவுப் பணியை முடிக்க அனுமதிக்கப்பட்டு, தற்போது வேறொரு அலுவலகத்திற்கு 'உரிய முறையில்'? முயற்சி செய்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இது போன்று மாவட்டத்திற்கு 10 சார்பதிவளார்கள் 'உரிய முறையில்'? முயற்சி செய்துள்ளதாகக் கூறுகின்றனர். இவர்களின் குற்றங்கள் ஐஜி யின் பார்வைக்குச் செல்லாதபடி அவர்களின் லாபி தடுப்பதாகவும் அதற்கு தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் இரண்டாம் நிலை அதிகாரி ஒருவரே துணை போவதாகவும் சொல்லப் படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் பதிவுத்துறை ஐஜி வெளியிட்ட சுற்றறிக்கையில் சார்பதிவளார் காலி பணியிடங்களில் உதவியாளர்களை பதிவுப் பணிக்கு நியமிக்கும் போது அந்த அலுவலகத்தில் 2500 டாக்குமெண்டுக்கு குறைவாக பதிவானால் மட்டுமே நியமிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். ஆனால் இத்துறையில் 95% அலுவலகங்கள் 3000 டாக்கு

மெண்டுக்கு மேல் பதிவாகும் அலுவலகங் களாகவே உள்ளன. சென்னை உட்பட சுமார் 100 அலுவலகங் களில் குடிமைப் பணி 17 (பி) குற்றச் சாட்டுகள் பெற்ற சார்பதிவாளர்களும் உதவியாளர் களுமே தொடர்ந்து பதிவுப் பணியை மேற்கொண்டு வருவதின் மூலம், ஐஜியின் உத்தரவு காற்றில் பறந்து அல்லல்படுகிறது.

நியாயமாக பணியாற்ற முயற்சிக்கும் அதிகாரிகள் பழிவாங்கப்பட்டு மாவட்டங்கள் கடந்து மாற்றப்படு கின்றனர். அந்த காலிபணியிடத்திற்குப் பதிவுப் பணிக்கு தகுதியே இல்லாதவர்கள், இலஞ்ச ஒழிப்புச் சோதனையில் சிக்கிய, தவறு செய்து சார்ஜ் மெமோ பெற்ற உதவியாளர்களாக உள்ள எழுத்தர்களை, மாவட்டப் பதிவாளர்கள், பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு அந்த இடங்களில் டெபுடேசன் ஆணை வழங்கி அவர்களை பதிவாளராக நியமிப் பதால் அவர்கள் இலஞ்சத்தில் திளைக்கின்றனர். அது போன்றவர்களையும் சேர்த்து சென்னையில் பணி யாற்றும் 17 உதவியாளர்களை கடந்த மார்ச் மாதம் பதிவுத்துறை தலைமை அலவலகத்திற்கு மாற்றி பதிவுத்துறைத்தலைவர் உத்தரவு இட்டார். இன்று வரை அவர்கள் பணியில் சேராமல் அதற்கான விலையைச் செலுத்தி விட்டு தொடர்ந்து கல்லாக் கட்டும் பணியைத் தொடர்வதோடு ஐஜியின் ஆணையை இரத்து செய்ய கீழ்மட்ட உயர் அதிகாரிகள் மேல்மட்ட அதிகாரி ஒருவரின் ஆதரவோடு செயல் பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

தற்போது 568 சார்பதிவாளர் அலுவலகப் பதவி களும் 50 நிர்வாக, தணிக்கை, மாவட்டப் பதிவாளர் அலுவலகப் பதவிகளும் 100 விழுக்காடு வெயிட்டாகக் கவனிப்பவர்களுக்கே வழங்கப்படுவதாகவும் பெரிய அளவில் கவனிக்க முடியாதவர்கள் வேலை செய்வ தற்கு என்றே ஒவ்வொரு மாவட்டத்திலும் வழிகாட்டி, சீட்டு, சங்கம், நிர்வாகம் என மூன்று சார்பதிவாளர் பதவிகள் உள்ளதாகவும் அவர்கள் அந்த இடத்திற்குப் போட்டியிடுவதாகவும் முற்றிலும் கவனிக்க முடியா தவர்களை மாவட்டங்களைத் தாண்டி பந்தாடப்படுவ தாகவும் பலர் புலம்புகின்றனர்.

இலஞ்சப் பணத்தின் ஊற்றுக்கண் சார்பதிவளார் அலுவலகங்கள்தான். தினந்தோறும் பெரிய அளவில் பணம் புழங்குவது இங்கே தான். அங்கு கடைகளை நடத்தும் பத்திர எழுத்தர்கள், இடைத்தரகர்கள், நீதிமன்றம் செல்லாத சில வழக்கறிஞர்கள் வழியாக நாள் முழுவதும் வசூலிக்கப்பட்ட இலஞ்சப்பணம் சார்பதிவாளர் மற்றும் அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கான பங்கு மாலையில் உள்ளே வரும். இப்படி வசூல் சிறப்பாகச் செய்யும் சிலர்தான் இந்த அலுவலகத்தை முழுவதும் கண்ட்ரோல் பண்ணு வார்கள். அங்கு அவர்கள் வைப்பதே சட்டம். அவர்கள் தருவதை வாங்கிக் கொண்டு சட்டம், விதிகளை கண்டு கொள்ளாமல், தவறுகளுக்கு ஏற்ற விலை நிர்ணயித்து வசூல் செய்தும், அவர்களின் இலாபம் கெடாமல் வேலையை முடித்துக் கொடுத்தால் மட்டுமே அந்த அதிகாரி மூன்றாண்டுகள் அங்கே பண மழையோடு தொடரலாம்.

மாறாக இது தப்பு, அது தவறு, இதைப் பதிவு செய்ய முடியாது என நியாயம் பேசும் அதிகாரிகளின் மேல் அடுக்கடுக்காய் பொய்க் குற்றச்சாட்டுகள் இலஞ்ச ஒழிப்புத் துறைக்கும் தலைமை அலுவலகத்துக்கும் படையெடுக்கும், அதனால் மேல் வருவாய் குறைவு ஏற்படுவதும் அந்த அதிகாரி மேலதிகாரிகளை 'கவனிப்பதும்' குறையும். உடனே அவர் தூக்கியடிக்கப் படுவது உறுதி. ஆனால் 'வெயிட்டாகக் கவனிக்கும்' திறமைபடைத்த அதிகாரிகள் மீது பெரும்பாலும் குற்றச்சாட்டுகள் புகாராக வருவது இல்லை. அப் படியே வந்தாலும் தலைமை அலுவலகத்தில் உள்ள அவர்களின் பாதுகாவலர்கள் அதனை துறைத் தலைமையின் கண்களுக்கு மறைத்துக் காப்பாற்றி அதற்கான விலையை கறந்து விடுவார்களாம்.

குறைந்தபட்ச நேர்மையோடு செயல்படுபவர்களின் மீது வரும் புகார்களை பட்டியல் இட்டு, பெரிதாக்கி அதனை முறையாக விசாரிக்காமல் அவர்கள் மீது ஒரு தலைப்பட்சமாக நடவடிக்கை எடுத்து பதிவுத்துறை யின் அங்கீகரிக்கப்பட்ட குற்றவாளிகளாக சித்தரிக்கப் படுவதும் தவறு எனத் தெரிந்தே விலை நிர்ணயித்த முறைகேடுகளில் ஈடுபடுவோர் எவ்வித தடையும் இன்றி பண மழையிலும் பதவி உயர்விலும் மேலே செல்வது தான் பதிவுத்துறையின் தற்போதைய போக்கு என விபரம் அறிந்தவர்கள் விவரிக்கின்றனர்.

பதிவுத்துறையில் தவறிழைத்தோர் மீது நட வடிக்கை எடுக்க பதிவுச் சட்டம், நிலையாணைகள், விதிமுறைகள், பதிவுத்துறைத் தலைவரின் சுற்றறிக் கைகள் என தெளிவாக உள்ள போதும், அவை அனைத்தும் அனைவருக்கும் பொதுவானதாக இல்லை என்பதும் அவை வேண்டியவர், வேண்டாதவர், இன்னும் சில காரண காரியங்களைப் பொருத்தி ஒரு தலைப்பட்சமாக நடவடிக்கை எடுப்பதும் பழிவாங் கப்படுவதும் பதிவுத்துறையில் வாடிக்கையாக உள்ள தாகச் சொல்லப்படுகிறது.

பதிவுத்துறையில் நடைபெறும் அனைத்து முறை கேடுகளுக்கும் பழிவாங்களுக்கும் தலைமை அலுவ லகத்தில் பணிபுரிவோரை ட்ரான்ஸ்பர் ஏதுமின்றி 30 ஆண்டுகள் வரை தலைமை அலுவலகத்தில் பணிபுரி வதால் வேண்டியவர், வேண்டாதவர் என பாகுபடுத் திப் பார்க்கும் அவல நிலை தொடர்கிறது. மேலும், அவர்கள் தங்களை நேர்மையாளர்கள் என்று கூறும் போது அவர்களை சார்பதிவாளர் அலவலகங்களில் பணிபுரிய ட்ரான்ஸ்பர் செய்து மாற்றம் கொண்டு வராமல் அவர்களை தலைமை அலுவலகத்தில் தொடர்ந்து பணியாற்ற அனுமதிப்பது ஒருவகையில் முறைகேடானது என பதிவுத்துறையின் சட்டங்கள் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

பதிவுத்துறையில் மண்டிக்கிடக்கும் முறைகேடு களை களைய, பதிவுத்துறையில் உள்ள இரண்டாவது,

மூன்றாவது ரக அதிகாரிகளை அனைத்து சார்பதி வகங்களிலும் நியமிப்பதோடு, கருப்பு ஆடுகளான முதல் ரக அதிகாரிகளை நிர்வாகப்பணியில் நியமனம் செய்ய வேண்டும். பதிவுத்துறைத் தலைவர் சார் பதிவாளர்களின் மீது வரும் புகார்களின் உண்மைத் தன்மையை நியாயமான அதிகாரிகளைக் கொண்டு குழு அமைத்து விசாரித்து நடவடிக்கையும் புகார்களை மறைக்கும் தலைமை அலுவலக அதிகாரிகளை களை யெடுக்கவும் வேண்டும்.

நேர்மையான அதிகாரிகள் அச்சமின்றி பணிபுரிய பாதுகாப்பு அளித்தால் மட்டுமே பதிவுத்துறை புத்துணர்ச்சி பெற்று பொது மக்களுக்கான துறையாக மாறும். மேலும், ட்ரான்ஸ்பர் விசயத்தில் கவுன்சிலிங் முறையை அமல்படுத்துவதுமே இதற்கு நீண்டகாலத் தீர்வாகும் என பதிவுத்துறையின் ஓய்வு பெற்ற உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பதிவுத்துறையின் மீது உள்ள களங்கம் மாற, பதிவுத்துறைத் தலைவரும், துறை அமைச்சரும், முதலமைச்சரும் நடவடிக்கை எடுப்பார் களா?

## திரு. நல்லக்கண்ணு



“என்னுடைய 80வது பிறந்த நாளை முன்னிட்டு ஒரு கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்தது கட்சி. அதை அந்த மேடையில் வைத்து கட்சிக்கே திருப்பிக் கொடுத்தேன். கோடி ரூபாயை வைத்து நான் என்ன செய்ய? தமிழக அரசு அம்பேத்கர் விருது கொடுத்து ஒரு லட்சம் ரூபாயை வழங்கியது. அதில் பாதியைக் கட்சிக்கும் மீதியை விவசாயத் தொழிலாளர் சங்கத் துக்கும் கொடுத்துவிட்டேன்.

கம்யூனிஸ்ட் கட்சியில் முழு நேர ஊழியராக இருந்தால் அலவன்ஸ் கொடுப்பார்கள். எனக்கு 2,500 ரூபாய் வருகிறது. என் மனைவி அற்புதம் ஆசிரியை யாக இருந்து ஓய்வு பெற்றவர். அவருக்கு ஓய்வூதியமாக 4,500 ரூபாய் வருகிறது. இதுதான் எங்களது வாழ்க்கைச் செலவுக்கான தொகை. அப்பா காலத்து வீடு, ஊரில் இருக்கிறது. ஒரு ஏக்கர் நிலத்தில் கொஞ்சத்தை விற்றது போக பாக்கி மிச்சம் இருக்கிறது. இவை போதும் எனக்கு. இதற்கு மேல் வைத்திருந்து என்ன செய்யப் போகிறேன்?“

*அரசியலில் இருப்பவர்களும், வர இருப்பவர்களும் இவரிடம் அரசியல் பாடம் கற்றுக்கொண்டு அரசியலுக்கு வந்தால் நாடு நலம் பெறும்.*

## அவலத்தின் அலங்காரம்

திரைப்படத்தின் வாயிலாகக் காணும் காட்சி
தெருவிலொட்டும் விளம்பரத்தால் விரசம் கூட்டி
வரைபடமாய் சுவற்றின்மேல் வரைந்து காட்டி
வசூல் ஒன்றே வாழ்க்கைக்கே உதவும் என்று
இரைதேடி அலைகின்ற பருந்தைப் போல
இங்குசிலர் அலைகின்றார் பணத்தைத் தேடி
திரைப்படத்தை இயக்குவதாய்க் கூறி நாட்டைச்
சீரழிவாய் படம்பிடித்துக் காட்டு கின்றார்.

இல்லத்து உறவுகளை எளிதில் காட்டி
இழிவான கருத்துக்கள் எடுத்துக் கூறி
சொல்கின்ற வார்த்தைகள் எல்லாம் கேட்டு
சிரிப்பார்கள் என்றெண்ணி சொல்லும் சொல்லால்
எல்லாரும் மனம்வெதும்பி எழுந்து வந்தே
ஏளனமாய் இகழ்ந்து கூறி வசைகள் பாடி
உல்லாசப் பொழுதுபோக்காய் எண்ணிச் சென்று
உரசலுடன் திரும்புகின்றார் ஊடல் கூடி

நல்லதொரு காட்சிதனைப் படமாய்க் காட்ட
நாட்டிலொரு நல்லவர் தான் இல்லை போலும்
சொல்வளமும் செயல்திறனும் எடுத்துக் காட்டிச்
சோம்பலிலா காட்சிகளாய் திரையின் மூலம்
நல்லதொரு சிந்தனையை மனத்தில் ஊட்டி
நமக்கெல்லாம் நல்வழியைக் காட்டும் வண்ணம்
எல்லோர்க்கும் ஏற்றவாறு இயக்கி நம்மை
இன்புற்று இருக்கஎண்ணிச் செய்வார் யாரோ?

*கவிஞர் இராமன்*

## எவை கிடைத்தாலும் விற்கும் சமுதாயம்!

மண்ணைத் திருடி விற்கும்
மக்களைக் கடத்தி விற்கும்
பெண்ணை புசித்து விற்கும்
பொன்னை ரசித்து விற்கும்
இயற்கையை அழித்து விற்கும்
அத்தனை இடத்தையும் இயல்பாய்விற்கும்
பதவிகளை பாதுகாப்பாய் விற்கும்
படிப்பை பகிரங்கமாய் விற்கும்
நீரை தடுத்து விற்கும்
நிஜங்களை மறைத்து விற்கும்
உழைப்பினை உறிஞ்சி விற்கும்
உயிரற்ற நம் உடலையும் விற்கும்

சமுதாயத்தின் சமத்துவம் விற்கப்பட்டதால்
இந்த வணிகம் தொடர்கிறது.

**– சிந்து**

# தமிழர்கள் பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்றால் "விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் உருவாக வேண்டும்"

## பெண்மந்திரி பேச்சால் இலங்கை நாடாளுமன்றத்தில் கொந்தளிப்பு

இலங்கையில் விஜயகலா மகேஸ்வரன் என்ற தமிழ்ப்பெண், ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ராஜாங்க மந்திரி பதவி வகிக்கிறார். குழந்தைகள் நலத்துறையை கவனித்து வருகிற அவர் யாழ்ப்பாணம் நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசினார்.

யாழ்ப்பாணத்தில் 6 வயது சிறுமி கற்பழித்து கொல்லப்பட்ட சம்பவத்தை அவர் வேதனையுடன் விவரித்தார். தற்போதைய அதிபர் சிறிசேனா அரசை எதற்காக தேர்வு செய்தோம் என்று மக்கள் வருத்தப்படுகிற நிலை உள்ளது என்று குறிப்பிட்டார்.

2009ஆம் ஆண்டு, மே மாதம் 18ஆம் தேதிக்கு முன்பாக (விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கு முன்பாக) நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதை நினைத்துப் பார்க்கிறோம்.

தற்போதைய சூழ்நிலையில், நாம் வாழ வேண்டும் என்று விரும்பினால், நாம் சுதந்திரமாக ஊருக்குள் நடக்க வேண்டும் என்று விரும்பினால், நமது குழந்தைகள் பாதுகாப்பாக பள்ளிக்கூடத்துக்கு சென்று திரும்பி வர வேண்டும் என்று விரும்பினால், நமது முக்கிய நோக்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீண்டும் கொண்டு வருவது தான்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிர்வாகம் நடை பெற்றபோது, சமூகத்தில் எந்த குற்றச் சம்பவமும் நடைபெறவில்லை. இந்த 3 ஆண்டுகால ஆட்சியில் நடந்தது என்ன? நமது பகுதியில் என்ன முன்னேற்றம் காணப்பட்டு உள்ளது என்பது தெரியவில்லை.

ஆனால் அரசாங்கத்தை ஒரே ஒரு விஷயத்துக்காக நான் பாராட்டுகிறேன். நமது நிலங்களை விடுவித்து, நமக்கு திரும்பத் தந்து இருக்கிறார்கள். அதைத் தவிர இந்த அரசாங்கம் நமக்கு எதையும் செய்து தரவில்லை.

இந்த பேச்சு இலங்கை நாடாளுமன்றத்தில் கடும் கொந்தளிப்புக்கு வழிவகுத்து விட்டது.



மந்திரி விஜயகலாவின் கருத்துகளுக்கு அரசாங்கத்தின் பதில் என்ன என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின. அத்துடன் மந்திரி விஜயகலா மகேஸ்வரன் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தின.

இது குறித்து ஐக்கிய தேசிய கட்சி விசாரணை நடத்தும் என கல்வி மந்திரி அகிலாவிராஜ் கரியவாசம் கூறினார். யாழ்ப்பாணத்தில் சிறுமி கற்பழித்து கொல்லப்பட்டதில் உணர்ச்சிவசப்பட்டு தாம் அவ்வாறு பேச நேர்ந்ததாக மந்திரி விஜயகலா தன்னிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் சபையில் பெரும் அமளி நிலவியது. சபையை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக சபையை 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் கருஜெயசூரியா ஒத்திவைத்தார். ஆனால் சபை மீண்டும் கூடியபோது நிலைமையில் மாற்றம் இல்லை. இதையெடுத்து சபை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

விஜயகலாவின் கருத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த சிங்கள எம்.பி.க்கள் அவர் பதவி விலக வேண்டும் என நாடாளுமன்றத்தில் போர்க்கொடி தூக்கினர். மேலும் அவரது சொந்தக் கட்சியிலும் எதிர்ப்புக் கிளம்பியது.

எனவே இது குறித்து விசாரணை நடத்துமாறு கட்சித்தலைவரும், பிரதமருமான ரனில் விக்ரமசிங்கே கேட்டுக் கொண்டார். மேலும் விஜயகலாவின் கருத்து அரசியல் சாசனத்துக்கு எதிரானதா? என அட்டார்னி ஜெனரலும் விசாரணை நடத்தி வருகிறார்.

இவ்வாறு தனது கருத்துக்கு எதிர்ப்பு வலுத்ததை தொடர்ந்து விஜயகலா மகேஸ்வரன், கடந்த 5ந் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார்.

ராஜினாமா நடவடிக்கைக்குப்பின் முதல் முறையாக, வடக்கு மாகாணத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் விஜயகலா பேசினார். அப்போது அவர் கூறுகையில், இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சி னைகள் குறித்து ஒருவர் பேசினால், அவரை விடுதலைப்புலியாக தெற்கு (சிங்களர்கள்) பார்க்கிறது. விடுதலைப்புலி ஆதரவாளராகவே அவர்களை முத்திரை குத்துகின்றனர். நான் வடக்கு மாகாண மக்களின் மனதில் இருப்பதைத்தான் பேசினேன். அவர்களுக்காகத்தான் பேசினேன். அவர்களுக்காகத்தான் பதவியை ராஜினாமா செய்தேன் என்றார்.

ராஜபக்சேவின் ஆட்சிக்காலத்தில் இருந்ததைவிட தற்போது தமிழர்களின் நிலை மேம்பட்டு இருப்பதாக கூறிய விஜயகலா, தனது முயற்சிகளுக்கு எதிர்ப்பு வந்தாலும், மக்களுக்கு நீதி கிடைப்பதற்காக தொடர்ந்து போராடுவேன் என்றும் தெரிவித்தார்.

# இந்தியாவில் நிலத்தடி நீர் மட்டம் சரிகிறது

## நாசா ஆய்வில் தகவல்




பூமியின் நிலத்தடி நீர்மட்டத்தை (நன்னீர்) அமெரிக்காவின் 'நாசா' அனுப்பிய செயற்கைக் கோள்கள் மூலம் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். உலக அளவில் 34 மண்டலங்களை சுமார் 14 ஆண்டுகளாக ஆய்வு செய்த விஞ்ஞானிகள் அதன் முதற்கட்ட தகவல்களை வெளியிட்டு உள்ளனர்.

இதில் பூமியின் ஈரப்பதம் மிகுந்த பகுதிகள் மேலும் ஈரமாகவும் உலர்ந்த பகுதிகள் மேலும் உலந்து கொண்டே போவதாகவும் கண்டறியப் பட்டு உள்ளது. இதற்கு மோசமான நீர் மேலாண்மை, பருவநிலை மாற்றம் மற்றும் இயற்கை சுழற்சி உள்ளிட்ட பல காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள், மத்திய கிழக்கு நாடுகள், கலிபோர்னியா மற்றும் ஆஸ்திரேலியாவில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதாகவும், இதனால் ஏற்கனவே பிரச்சினைகள் உருவாகி இருப்பதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. இந்த ஆய்வுக்காலத்தில் வட இந்தியாவில் போதுமான மழை இருந்த பிறகும் நெல், கோதுமை போன்ற பயிர்களுக்காக நிலத்தடி நீரை அதிக அளவில் உறிஞ்சியதாக அந்த ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளது.

இது எதிர்கால வாழ்விற்கு நல்லதல்ல என்று கூறியுள்ள விஞ்ஞானிகள், பூமியைப் பொறுத்த வரை நிலத்தடி நீரே மிகவும் அத்தியாவசிய வள மாகும் என்று குறிப்பிட்டுள்ளனர்.



# காட்சிப் பிழை

தாய்ப்பால் வாசம் அந்தக் குடிசை முழுதும் பரவி யிருந்தது. கூரையின் வழியாக சூரியஒளி கீற்றுகளை வினோதமாய் பார்த்து தன் கைக்கால்களை அசைத்த படி இருந்தது அந்தக் குழந்தை.

கணவன் மனைவி சல்லாப சிணுங்கல்களை மட்டுமே கேட்டு பழகிப்போன அந்த ஒற்றை அறை கொண்ட ஓலை குடிசை வீடு.

ஒரு குழந்தையின் அர்த்தமற்ற சிணுங்கல்களையும் மொழியின்றி முற்றுபெறாத வார்த்தையின் சத்தங் களையும் கேட்டு பூரித்து கொண்டிருந்தது.

ஜோடி இருபது ரூபாய் என்று சந்தைக்குபோன நாகராசு தேக்கு கன்றுகளை வாங்கி வந்து குடிசைக்கு அருகில் நட்டுக் கொண்டிருந்தான்.

நாகராசு சூது வாது அறியாதவன். அதற்காக விவரம் இல்லாதவன் என்று சொல்ல முடியாது.

நல்ல உழைப்பாளி, அந்த ஊரில் அவன் உழவு ஓட்டாத காணியே இல்லை.

அண்டை வெட்டுவது, பாத்திகட்டுவது, சால் கட்டி நீர் இறைப்பது அவனது தின வேலை. ஆடு களை பற்றி நன்கு அறிந்தவன் என்பதால் வாரச் சந்தைக்கு ஆட்டு தரகு பார்க்க வந்து அழைத்து போவார்கள். சந்தையில் மிரண்டு கத்தும் ஆடுகளைக் கண்டு அவன் இதயம் படபடக்கும். அதற்கு அவன் மனதில் நீங்கா வடு ஒன்று உள்ளது.

ஆட்டு பட்டி போடுவது தான் அவனது குடும்பத் தொழிலாக இருந்தது.

அவனது தந்தை மூக்கன் அதற்காகவே ஐம்பது ஆடுகள் கைவசம் வைத்திருந்தார். அப்பா இறந்த பிறகு சிறுவனான நாகராசுவும் அவன் ஆத்தா செல்லாவும் ஊர் ஊராகப் போய் அந்த தொழிலைச் செய்து வந்தனர்.

ஒரு நாள் மேச்சல் முடிந்து பட்டியில் ஆடுகளை அடைக்கும் போது தான் தெரிந்தது ஒரு ஆடு குறைவது. “ஏப்பா ஓடுப்பா ஒரு ஆடு மட்டும் கொறை யுது” ஆத்தா செல்லா பதற...

**“தலைச்சன் பொண்ணு பொறந்தா குடும்பம் தலைக்கும்” பேராண்டி சக்காளத்தி அப்படியே உங்க ஆத்தாவ உறிச்சி வச்சிருக்க பாரு” என்று பள்ளுபோன பாக்கியம் கிழவி சொல்லிப் போனாள்.**

துண்டை எடுத்து தோளில் போட்டுக்கொண்டு கையில் வேல் கம்புடன் ஆட்டைத் தேடி ஓடினான் சிறுவனான நாகராசு.

எங்கு தேடியும் கிடைக்கவில்லை திரும்பி வந்து ஆட்டு பட்டியை பார்த்தான்

பட்டிக்குள் ஆடுகள் வெறித்து நின்னு சத்தமிட்டு அங்கும் இங்குமாக ஓடின. ஆட்டு குட்டிகளின் மத்தியில் அலங்கோலமாய் கொலையுண்டு கிடந்தாள் ஆத்தா செல்லா.

அவள் சேலை முந்தானையாலே அவள் கழுத்து நெரிக்கப்பட்டு பிணமாய் கிடந்தாள்.

ஆத்தா செல்லாவை கொலை செய்து விட்டு தூரத்தில் முன்று கருப்பு மனிதர்கள் ஓடுவதை பார்த்த நாகராசுக்கு அத்திரமும் அழுகையுமாய் வந்தது. நில்லுங்கடா என்று கையில் வைத்திருந்த வேல்கம்பை வீசினான்.

அது பாதி தூரம் போய் விழுந்தது.

இப்படி ஒரு நிலைமை எந்த மகனுக்கும் வரக் கூடாது. ஆட்டு பட்டியில் போதை கயவர்களால் கிழித்து எரியப்பட்டு அகோரமான முகத்துடன் இறந்து கிடக்கும் தன் தாயை சேலையால் மூடி மடியில் கிடத்தி செய்வதறியாது சத்தம்போட்டு அழுதான் நாகராசு.

பாவம் என்று உச்சி கொட்டி வேடிக்கை பார்த்தது அந்த ஊர் ஜடங்கள்.

இந்த பொணத்தை தூக்கிட்டு எவ்வளவு தூரம் போக போர, சின்ன பையனா வேர இருக்கியேப்பா எங்கூரு சுடுகாட்டுலேயே காரியத்தை முடிச்சிப்புட்டு போ“ இரண்டு ஆடுகள் கூலி வாங்கி கொண்டு காரியத்தில் இறங்கியது மூவர் கொண்ட குழு “ஏப்பா யாருடா அவன்?”

யாரு எந்த சாதினு தெரியாது. நம்மூரு சுடுகாட்டுல பொணத்தை பொசுக்கிறேனு சொல்ற, ஏரிக்கரை ஓரமா இருக்கிற பொட்டல்ல வச்சி இந்த பொணத்த எரிச்சிட்டு வாங்கடா“ என்று யோசனை சொன்ன மேல் சாதிகாரனுக்கு யோசனைக்கு கூலியா ஒரு ஆடு வாங்கி போனான்.

இரண்டு ஆடு கடன் வாங்கிட்டு ஆத்தாளுக்கு காரியம் பண்ற அந்த ஆசாமிகள் போலத்தான் இருந்தார்கள். வேல்கம்பை வீசிய போது ஓடிய கருப்பு ஆசாமிகள் என்ன பண்றது பொழைக்க வந்த இடத்துல அவங்கள எதிர்த்து கேள்வி கேட்டா நாம உயிரோட ஊருத்திரும்ப முடியாது. பாவப்பட்ட பிரேதத்தை எரிக்கிறதுல சாதி பாக்குற சின்ன சாதி பயலுக இவனுக. தன் மனதுக்குள்ளே நொந்து அழுது கொண்டே மிஞ்சிய ஆட்டை ஓட்டிக்கிட்டு ஊருவந்து சேர்ந்த நாகராசுவிடம் உங்க அம்மாவை எங்க காணலனு ஊர்க்காரங்க கேள்விக்கு அம்மா பாம்பு கடிச்சி செத்து போச்சினு நம்பவச்சான். அவனும் அம்மா பாம்பு கடிச்சிதான் செத்து போச்சினு நம்ப ஆரம்பித்தாலும் அம்மாவின் கழுத்து நெரிக்கப்பட்டு கிடந்த அவளது அகோர முகம் அவன் கண்முன் வந்து போகும்.

அதுக்கப்புறம் ஆட்டையெல்லாம் வித்துப்புட்டு ஊருக்குள்ளையே கூலி வேலைக்கு போனான். அம்மாவின் அந்த அகோரமுகத்துடனான கடினமான நாட்கள் மெல்ல நகர்ந்தது.

அம்மா செத்து போனதுக்கு அப்புறம் அம்மாவின் முகசாயலில் உள்ள தாய்மாமா தான் அவ்வப்போது அவனுக்கு ஆறுதலாய் இருந்தார். மாப்ள எத்தன நாள் இப்படி தனியா கஷ்டபடுவ என்று தன் மகள் திருமீயை அவனுக்கு கல்யாணம் பண்ணிவச்சார்.

மாமன் மகள் திருமீ மேல் நாகராசுக்கு உள்ளூர காதல் இருந்தது உண்மை தான்.

அதன் பரிசு வந்து பிறந்து இருக்காளே நாகராசு வின் மகள் நாகராசு தேக்கு கன்றுகளை நட்டு தண்ணீர் தெளித்து கொண்டிருந்தான்.

ஊரில் உள்ளவர்கள் எல்லாம் நாகராசுவின் மகளை வந்து பார்த்துப் போனார்கள்.

“தலைச்சன் பொண்ணு பொறந்தா குடும்பம் தலைக்கும்“ பேராண்டி

சக்காளத்தி அப்படியே உங்க ஆத்தாவ உறிச்சி வச்சிருக்க பாரு“ என்று பள்ளுபோன பாக்கியம் கிழவி சொல்லிப் போனாள்.

குடிசையின் உள் நுளைந்து மகளைப்பார்த்தான் “ஆமா அம்மாவை போலத்தான் இருக்கிறாள். அம்மா வின் கோர முகம் அவன் மனகண்ணில் வந்து போக வில்லை. அவன் கண்களில் கண்ணீர் கோர்த்துக் கொண்டது.

இடுப்பு வலி குறையாத திருமீ “என்னாங்க கொட்டில தண்ணி வச்சிருக்கேன் குளிச்சிட்டு வாங்க“ என்று மெல்ல திரும்பிப்படுத்தாள்.

கண்களை துடைத்துக்கொண்டு வாசலுக்கு வந்தவன் அப்போதுதான் கவனித்தான். வீரையன் குடிசை ஓரமாக வாசலில் நின்று கொண்டிருந்தார்.

அழுக்காகி கிழிந்து போன வேட்டி, காக்கி கலர் சட்டை, பரட்டை தலை, பல நாள் சவரம் செய்யாத தாடி பார்ப்பதற்கே பைத்தியக்காரக் கோலத்துடனே நின்றார்.

மகள் செத்துப்போன பிறகு வீரையன் பைத்தியமா ஆகிட்டாருனு ஊரு பேசுச்சி.

கையில் ஒரு கம்பை வச்சிகிட்டு எம்மகளா பார்த்திங்களா, எம் மகள பார்த்திங்களானு ஊரையே சுத்தி சுத்தி வருவாரு, எப்போ தூங்குவாரு எப்போ எந்திருப்பாருனு யாருக்கும் தெரியாது. தன் எட்டு வயசு மகளை எமனுகிட்ட தூக்கி கொடுத்துட்டு அவ நினைப்பாவே திரியுறாரு. ஊரையே புரட்டி போட்ட சம்பவம் அது.

பொட்டை புள்ளைய பெத்து போட்டுட்டு, வீரையன் பொண்டாட்டி தன் கடமை முடிச்சதுனு சாமிகிட்ட போய் சேர்ந்துட்டா. வீரையன் தான் அப்பனுக்கு அப்பனா, ஆத்தாளுக்கு ஆத்தாவா வளத்துட்டு வந்தாரு. தாயை பறிகொடுத்து தவிக்குதுனு ஊர்காரங்க அவளுக்கு நல்லது கெட்டது பார்த்தாங்க. யாரு எது கொடுத்தாலும் வாங்குவா, யாரு எது சொன்னாலும் நம்புவா.

அன்புக்கு மட்டுமே ஏங்கி தவிச்ச அந்த கொழுந்து. வா நான் உனக்கு மிட்டாய் தாரேனு பொம்பள சோக்கு புடிச்ச மணியன் அவளை குடிசைக்குள்ள கூட்டிட்டு போனான். வெறிநாய் கூண்டுக்குள்ள கோழிக்குஞ்சி சிக்கின மாதிரி சிக்கிட்டா "அப்பா தேடுவாரு நான் போறான். எனக்கு மிட்டாய் வேண்டாம் விடுங்கனு" அழுதா அவன் அவள் மேல் மூர்க்கமாய் பாய்ந்து அவள் வாயில் துணிவைத்து திணித்தான். அவள் கைகளால் அவனை பலம் கொண்டவரை அவனை அடித்தாள். அந்தப் பிஞ்சி கைகளை ஒடித்து பின்புறமாக கட்டினான். கால்களால் உதைத்தாள். கால்களையும் கட்டினான். நித்தியா மயங்கினாள். அந்த பிஞ்சி தேவதை அதற்கு பிறகு கண்விழிக்கவே இல்லை.

நித்தியாவை காணவில்லை வீரையன் பதறினார். ஊரே தேடியது தன் கணக்குக்கு மணியனும் தேடினான் கிணறு குளம் குட்டையினு சல்லடை போட்டு சலிச்சாங்க. ரத்தம் சொட்டச் சொட்ட பாயில் சுருட்டி முல்லு பத்தையில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

வீரையனுக்கு வாழ்க்கையில் இருந்த ஒரே ஆறுதல் மகள் நித்தியா தான். வாழ்க்கையினா என்னானு தெரிவதற்கு முன்னே அந்த வெறிநாய் அவளை தன் கோரப்பல்லால் கடித்து குதறியது. ஊரே மார்பில் அடித்துக்கொண்டு கதறியது. என் தங்கமே உனக்கா இந்த கதி, ஓங்கி ஓங்கி தலையில் அடித்துக்கொண்டு மயங்கிச் சரிந்தார் வீரையன்.

பாயை அடையாளம் கண்டு மணியனை அடித்து இழுத்து போனது போலீஸ்.

அந்த ரணம் ஊர்வாசிகளின் மனதிலிருந்து மறைய சில மாதங்கள் பிடித்தது. ஆனால் வீரையனுக்கு மட்டும் மகளை மறக்க முடியவில்லை. மகள் தன்னுடன் தான் இருக்கின்றாள் என்று நம்பிக் கொண்டிருந்தார்.

நாகராசுவிற்கு வீரையனின் ரணம் புரிந்தது. நாகராசுவும் அப்படியான சூழ்நிலையில் இருந்தவன் தானே, "நாகராசு மகளை பத்திரமாபார்த்துக்கோ, என்னோட வாழ்க்கை ஒவ்வொரு தகப்பனுக்கும் பாடம் கண் கொத்தி பாம்பா இருக்கணும் நாகராசு". சொல்லிக் கொண்டே கையில் உள்ள கம்பை சுழற்றியப்படி புறப்பட்டட வீரையனை "வீரன்ன இருங்க ஒரு வாய் சாப்பிட்டு போகலாம்" மறித்தான் நாகராசு.

"சோரா எனக்கா?

ஏ தங்கத்தை சீரழிச்சிட்டு போனானே அவன் இன்னைக்கு சிறையிலிருந்து திரும்பி நம்ப ஊருக்கு வாரான். அவன் குடலை உருவி மாலையா போட்டாதான் ஏ...தங்கத்தோட ஆத்மா சாந்தி யடையும். அவர் வார்த்தைகளில் கோபம் தெரித்தது. கண்ணீரும் கம்பலையுமாய் நடக்கத் துவங்கிய வீரையன் தெருவை பார்த்து திடுக்கிட்டார்.

தெருவாசிகள் சிலர் பதட்டமாக ஓடிகொண்டிருந் தனர். வீரையன் ஒருவனை மறித்து விவரம் கேட்டான். "உன்னோட மகளை கொலை பண்ணிய மணியனை யாரோ கழுத்தை அறுத்து ஏரில வீசிட்டாங்க".

வீரையனுக்கு செய்தியை கூறிவிட்டு பிணத்தை காண ஓடினான் ஒருவன். வீரையனுக்கு இப்போது தன் மகள் ஆத்மா சாந்தியடையும் என்ற நம்பிக்கை வந்தது. கழுத்து அறுபட்டு கிடக்கும் மணியனைப் பார்க்க வீரையனும் கம்பை சுழற்றிக் கொண்டு ஓடினார். இந்த காரியத்தை யார் செய்திருப்பா? என்று யோசித்தாலும் செய்தவன் கடவுள். அவன் நல்லா இருக்கணும். அவன் குலம் தலைக்கனும். வேண்டிக் கொண்டே ஓடினார்.

இடுப்பை உருத்திய கத்தியை எடுத்து கூரையில் சொருகி வைத்துவிட்டு குளிக்க போனான் நாகராசு.

நாகராசுவின் ஆத்தா செல்லா ஆத்மாவும் வீரையனின் மகள் நித்தியாவின் ஆத்மாவும் இப்போது சாந்தியடைந்திருக்கும்.

நாகராசுவின் மகள் கூரையில் ஓட்டை வழியாக விழும் சூரியக்கதிர்களை ரசித்தபடி கை கால்களை அசைத்து கொண்டிருந்தாள் சுதந்திரமாக...


**எம். கலைக்கூத்தாடி**

*(887042 4559)*

# போராடிப் பெற்ற செம்மொழி தமிழால் உயர்வோம்

**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**



ஜூன் 6ந் தேதி தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட தினம்.

"உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ்" என்னும் வரலாற்று உண்மையை தமிழ் பேரறிஞர் தேவநேயப்பாவாணர் ஆய்ந்து உலகுக்கு அறிவித்து உள்ளார். இன்று வெளிநாட்டு ஆய்வறிஞர்கள் பலர் இவ்வுண்மையை உலகுக்கு எடுத்துரைத்து வருகின்றனர்.

தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி எனவும், உண்மைச் செவ்வியல் மொழியாகத் திகழும் நிலையில் இன்றளவும் வாழும் மொழியாகவும் புதுமைக்கும், பழமைக்கும் இயைவான மொழியாகவும் உள்ள தகுதி தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு என்பதையும் பரிதிமாற்கலைஞர் தம் நூலில் எடுத்துரைக்கிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுக்குரிய உலகமொழிகள் ஆறுதான். அவையாவன தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகிய மொழிகளாகும். இவற்றுள் லத்தீன் மொழியும், ஈப்ரு மொழியும் வழக்கிழந்த மொழியாக கருதப்படினும், இஸ்ரேல் தனிநாடாக ஆன பின் ஈப்ரு மொழி புத்துணர்ச்சி பெற்று உயிரூட்டமான மொழியாக வளர்த்து வருகிறார்கள்.

செம்மொழி என்ற நிலைக்கு உரிய தகுதிகள் பதினொன்று. இந்த அனைத்து தகுதிகளும் முற்றிலும் பொருந்தக்கூடிய ஒரே மொழி தமிழ்மொழி மட்டும் தான். இந்தியாவின் பழமையான செம் மொழிகள் தமிழும் சமஸ்கிருதமும் ஆகும். ஆனால் பேச்சிலும் எழுத்திலும் இன்றும் மாறாத மொழி தமிழ் மட்டுமே.

இந்தியாவில் சமஸ்கிருத செம்மொழிக்கு மட்டும் இந்திய நாடு விடுதலை அடைந்தபோது செம்மொழி தகுதி வழங்கப்பட்டு பேச்சு வழக்கில்லாத அம்மொழியின் வளர்ச்சிக்கு கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டது.

செம்மொழிகளில் தலைமைத்துவமான தமிழ் மொழிக்கும் செம்மொழி தகுதியை இந்திய அரசு வழங்க வேண்டும் என்ற வெளிப்பாடு தமிழ் மக்களிடத்தில் மேலோங்கியது. தமிழக, உலகளாவிய அறிஞர்கள் பலர் இந்திய அரசை தமிழை செம்மொழியாக்க வலியுறுத்தினர். தமிழை செம்மொழியாக்க வேண்டிய அவசியத்தை வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது திராவிட முன்னேற்ற கழகத்தின்

தலைவர் கருணாநிதி பெரிதும் வலியுறுத்தினார். தமிழ் மீது அக்கறையுள்ள மற்ற கட்சியினரும் குரல் கொடுத்தனர்.

தமிழை செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பற்றி அப்போதைய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த முரளி மனோகர் ஜோஷியிடம் 95 -2003 அன்று செய்தியா ளர்கள் கேட்டபோது அது குறித்து மத்திய அரசு கல்வியாளர்களுடன் பரிசீலனை செய்து வருகிறது என்று பதில் அளித்தார்.

தமிழ்மொழியை செம்மொழியாக்குவது பற்றிய முயற்சி 1916ஆம் ஆண்டிலேயே சைவ சமய சித்தாந்த மகா சபையும், 1919ஆம் ஆண்டு கரந்தை தமிழ் சங்கமும் இதைத்தொடர்ந்து பல அறிஞர்கள் தமிழ் அமைப்புகளின் வழி தொடர் முயற்சிகள் இருந்தன. தமிழ் அமைப்பினர் அனைவரும் இணைந்து. இந்திய சான்றோர்கள் பலர் இணைந்து டெல்லியில் பல கருத்தரங்குகளை நடத்தினர்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்மொழியை செம்மொழி என அறிவிக்க வலியுறுத்தி தமிழறிஞர்கள் 100க்கும் மேலானோர் இந்திய நாடாளுமன்றத்தின் முன்பு தமிழை செம்மொழி என அறிவிக்கும் வரை பட்டினிப் போராட்டம் (உண்ணா நோன்பு) இருப்பதற்கு டெல்லி சென்றனர்.

அப்போது வாஜ்பாய் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த திருநாவுக்கரசர் “சாகும் வரை பட்டினிப் போராட்டம் வேண்டாம். ஒரு நாள் உண்ணா நோன்பு இருங்கள். நான் உங்களுக்கு ஆதரவாக இருக்கிறேன் என்றார்.

அவர் வேண்டுகோளினை ஏற்று தமிழ் அறிஞர்கள் செந்தமிழை செம்மொழியாக்கிட தலைநகர் டெல்லியில் ஜந்தர்மந்திர் எனும் இடத்தில் பட்டினிப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தை வழிநடத்திய குழுவில் நான் (பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்) புலவர் சுந்தரராஜன், முனைவர் ஆர். அழகப்பன், புலவர் அறிவுடைநம்பி, அறிஞர் கண்ணன், டெல்லி தமிழ்ச் சங்கத் தலைவர் முகுந்தன், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி இருந்தனர்.

தமிழை செம்மொழியாக்க வேண்டுமென்ற பட்டினிப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது. கருணாநிதியின் மிகப்பெரும் அனைத்து உதவிகளும், ஒத்துழைப்பும் இந்த போராட்டம் வெற்றி பெற முக்கிய காரணமாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும். போராட்டக்குழுவினர் 1882003 அன்று மாலை பிரதமர் வாஜ்பாயை நேரில் சந்தித்து தமிழ்மொழி செம்மொழியாக வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி விண்ணப்பித்தனர். அதே போன்று இந்திய குடியரசு தலைவரையும் நேரில் சந்தித்தனர்.

தமிழுக்கு செம்மொழி தகுதி நிலையை வாஜ்பாய் பா.ஜ.க.அரசு ஆட்சி செய்த வரை தரவில்லை.

காலம் மாறியது. 2004ஆம் ஆண்டு கருணாநிதி தமிழகத்தின் முதல்அமைச்சரானார். காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு மன்மோகன்சிங் பிரதமர் ஆனார். தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தி.மு.க.மற்றும் கூட்டணி கட்சி உறுப்பினர்களாக இருந்தனர்.

இத்தகைய பெரிய வாய்ப்பில் அன்றைய முதல் அமைச்சர் கருணாநிதி டெல்லியில் தனக்குள்ள அரசியல் செல்வாக்கால் மன்மோகன்சிங், சோனியா ஆகியோரின் பேராதரவினால் போற்றத்தக்க நம் தமிழுக்கு செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்தார். அதன்படி 6-6-2004 அன்று தமிழ்மொழியாக அறிவிக் கப்பட்டது. செம்மொழி தகுதியை அரசியல் சட்ட வழியாக முதலில் பெற்ற மொழி தமிழ்மொழியே என கருணாநிதி தந்த பெருமிதம் தமிழர்கள் நன்றியோடு போற்றத்தக்கதாகும்.


செம்மொழி தகுதியை பெற்றபின் மைசூருவில் இருந்த செம்மொழி நிறுவனத்தை கருணாநிதி சென்னைக்கு கொண்டு வந்தார். செம்மொழி மேம்பாட்டுக்கு ஐம்பெரும் குழு, எண்பேராயம் அமைத்தார். இவ்விருகுழுக்களுக்கும் முதல்அமைச்சரே தலைவராகி பேரறிஞர் குழந்தைசாமி உள்ளிட்ட வர்கள் உறுப்பினர்களாக இருந்து தமிழ் செம்மொழி மேம்பாட்டுக்கு உயரிய பணியாற்றினர்.

அதன்பின் செம்மொழிக்கென்று தனி நிறுவனம் அமைத்திட கருணாநிதி ஆவன செய்தார். அவர் காலத்தில் செம்மொழி நிறுவன பணி மிகச்சிறப்பான முறையில் நடந்தது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தமிழ் அமைப்புகள் வழி சங்க இலக்கியங்கள், பண்பாட்டு நெறிகள் பற்றி பல்வேறு ஆய்வுகள் செம்மொழி நிறுவனத்தின் வழி சிறப்பாக நடந்தன. இடைக் காலத்தில் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்குப் பின் தமிழ் செம்மொழி நிறுவனம் வலுவும், பொலிவும் இழந்து நலிவடைந்து வருகிறது.

தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், தமிழ் செம்மொழி நிறுவன தமிழ் மேம்பாட்டு பணிகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும். நம் தாய் மொழி உலக அரங்கில் உயர்வடைய நடுநிலையோடு செயல் படும் நல்வழியில் செம்மொழி நிறுவனத்தை நடக்க வைப்பது தமிழக அரசின், தமிழர்களின் கடமையாகும். ●

# மழை நீரைத் திறந்தவெளிக் கிணறுகளுக்குத் திருப்பும் திட்டம்

## தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை



மழை நீரைத் திறந்தவெளிக் கிணறுகளுக்குத் திருப்பும் திட்டமே குறைவான செலவில் நிறைவான பலன் தரும் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம்

நிலத்திற்கு மேலே இருக்கும் தண்ணீர் அரசுக்கு, மக்களுக்கு, விவசாயிகளுக்குச் சொந்தம், பறவைகளும், விலங்குகளும் கூட இதையே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நிலத்திற்குக் கீழே இறங்கும் நீர் தாவரங்களுக்கு மட்டுமே சொந்தம். இந்தத் தாவரங்களே இந்த உலகில் வாழும் இதர உயிரினங்களுக்கு உயிர்க் காற்றையும், உணவையும், கொடுப்பவை. இவ்வாறாக இயற்கை நீர் பங்கீட்டை அளித்துள்ளது. இதனை உணர்ந்து நம் முன்னோர்கள் மழை நீரை ஏரி, குளம், குட்டை, கண்மாய் மற்றும் ஊரணிகளில் பக்குவமாகத் தேக்கிவைத்து பயன்படுத்தி வந்தனர். நிலத்தடி நீரை உறிஞ்சி எடுக்கவில்லை.

இஸ்ரேல் போன்ற பாலைவன நாடுகளில் கூட நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பதற்குத் தடை உள்ளது. ஆனால் நமது நாட்டில் 1000 அடிக்கும் மேலாக துளையிட்டு, நிலத்தடி நீரை உறுஞ்சுவது நடைமுறையில் உள்ளது. இது தொடருமோயானால் தாவரங்கள் பட்டுப்போய் நாடு வறட்சியின் கோரப் பிடியில் சிக்கும். கோரத் தாண்டவத்திற்குப் பிறகு அடியெடுத்து வைப்பது பாலை வனமாகத் தான் இருக்கும். இதை நோக்கி நாடு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

மழை நீரை அறுவடை செய்யத் தவறினால் எதிர் காலம் கேள்விக்குறியாகும். இதனை உணர்ந்து மழை நீர் அறுவடைத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. கூரையில் வடியும் நீரை குழாய் வழியாக இறக்கி நிலத்தின் கீழ் செலுத்தும் திட்டமாக இது அறிமுகப் படுத்தப் பட்டது. இந்தத் திட்டம் கூடுதலான செலவு பிடிக்கும். அத் தோடு தொடர் பராமரிப்பும் செய்ய வேண்டியிருக்கும்.

ஆழ்குழாய் கிணறுகளுடைய எண்ணிக்கையும், பயன்பாடும் கூடியதால் திறந்த வெளிக் கிணறுகள் வறண்டுபோய் கைவிடப்பட்டன.

இவற்றை மூடுவ தற்கு கூடுதல் செலவு ஆகும் என்பதால் பாழும் கிணறுகளாக பயனற்றுக் கிடப்பதைப் பரவலாக பார்க்க முடியும். மழை காலங்களில் ஓடையில் வழிந் தோடும் நீரைத் தடுத்து திறந்தவெளி வாய்க்கால்கள் மூலமாகவோ அல்லது குழாய் பதித்தோ பயனற்றுக் கிடக்கும் பாழும் கிணறுகளுக்குத் திருப்பினால் அப்பகுதி நிலத்தடி நீர் மேம்படும். இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு மிகவும் குறைவாகவே இருக்கும். கிடைக்கும் பலன் கூடுதலாக இருக்கும்.

மேலும் பராமரிப்புச் செலவும் அவ்வளவாக இருக்காது. இந்தத் திட்டத்தை உடனடியாக செயல் படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானும் கெடும்"

**செ. நல்லசாமி**
**செயலாளர்.**



# அன்புள்ள ஆசிரியர்

ஒரு வார இறுதிக்குப்பின் திங்கட்கிழமை காலை வகுப்பினுள் நுழைகிறார் ஆசிரியை சுமதி அவருக்கு ஒரு வழக்கம்இருந்தது.

அதுதான் வகுப்பறைக்குள் நுழைந்ததுமே மாணவர்களைப் பார்த்து, 'Love you all!' என்று சொல்வது. அவர் பொய் சொல்கிறார் என்று அவருக்கே தெரியும்.

ஏனெனில் அந்த வகுப்பிலுள்ள ஒரேயொரு மாணவனை மட்டும் அவரால் நேசிக்கமுடியவில்லை.

ஒழுங்காய் உடுத்தாத, எதிலுமே ஒழுங்காய் இல்லாமல் சுட்டிக்காட்டுவதற்கு எந்தவொரு பாசிடிவ் அட்டிடியூடும் இல்லாத டெடி என்கிற தியோடர்! அவனுடன் மட்டும் ஆசிரியை சுமதி நடந்துகொள்ளும் விதம் வித்தியாசமானது!

எந்தவொரு தவறான விஷயத்திற்கும் அவனையே உதாரணம் காட்டினார். எந்த நல்ல விசயத்திற்கும் அவனை நிராகரித்தார்.

அவ்வாண்டிற்கான காலாண்டு பரீட்சை வந்தது. முன்னேற்ற அறிக்கைகள் வகுப்பாசிரியர்களிடமிருந்து தலைமை ஆசிரியரின் கையெழுத்துக்கு அனுப்பப் பட்டது.

ரிப்போர்ட்களை மேற்பார்வை செய்து கையொப்ப மிடுத்துக்கொண்டிருந்த தலைமை ஆசிரியர் ஆசிரியை சுமதிக்கு அழைப்பு விடுத்தார்.

அவர் வந்ததும், "முன்னேற்ற அறிக்கை என்பது ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தை, அறிவிக்க வேண் டும். தன் பிள்ளைக்கும் ஓர் எதிர்காலம் உண்டென்ற நம்பிக்கையை பெற்றோருக்கு தரவேண்டும்! நீங்கள் எழுதியிருப்பதை பார்க்கும்போது பெற்றோர் அவன் மீது நம்பிக்கை இழந்துவிடுவார்கள்!" என்று கேள்விக் குறியுடன் டெடியின் முன்னேற்ற அறிக்கையை காட்டிக்கேட்டார்.

உடனே சுமதி "என்னால் ஒன்றுமே செய்ய முடியாது அவனைப் பற்றி எழுதுவதற்கு என்னிடம் ஒரு நல்ல விசயம்கூட இல்லை! என்றார்.

உடனே தலைமை ஆசிரியர் அங்குள்ள நிர்வாக ஊழியர் ஒருவரிடம் கடந்த ஆண்டுகளுக்கான டெடியின் முன்னேற்ற அறிக்கைகளை சுமதிக்கு கொடுக்குமாறு பணித்தார்.

அறிக்கைகள் வருகிறது. ஒவ்வொரு ஆண்டாய் விரித்துப்படிக்கிறார் சுமதி.

மூன்றாம் வகுப்பறிக்கை சொன்னது. "டெடியின் தாய் இறுதிநிலை கேன்சர் நோயால் பாதிக்கப் பட்டுள் ளார். அதனால் டெடி மீது முன்னர்போல அவரால் கவனம் செலுத்தமுடியவில்லை. அதன் விளைவு அவனிடம் தெரிய ஆரம்பித்திருக்கிறது".

ஐந்தாம் ஆண்டின் அறிக்கை இவ்வாறு சொன்னது, "டெடியின் தாயார் இறந்துவிட்டார். அவனுக்கு அவசரமாய் வழிகாட்டல் தேவைப்படுகிறது. இல்லை யேல் நாம் அந்தக்குழந்தையை இழந்துவிடு வோம்!"

கண்களில் கண்ணீருடன் சுமதி தலைமை ஆசிரியரைப்பார்த்து சொன்னார். என்ன செய்ய வேண்டுமென்று எனக்கு தெரியும்.

அடுத்த திங்கள் காலை ஆசிரியை வகுப்புக்கு சென்ற பிள்ளைகளை பார்த்து வழக்கம்போல் 'Love you all!' என்றார்.

இம்முறையும் அவர் பொய் சொல்கிறார் என்று அவருக்குத்தெரியும். ஏனென்றால், தற்போது மற்றக் குழந்தைகளைவிட டெடி மீதிருக்கும் அவரது அன்பு அளவுகடந்திருந்தது.

டெடியுடனான தன் அணுகுமுறையை உடனே மாற்றுவதென்று அவர் தீர்மானித்திருந்தார்.

அதன் பின்னர் ஒவ்வொரு நல்ல விஷயத்திற்கும் டெடியின் பெயர் உச்சரிக்கப்பட்டது. ஒவ்வொரு தவறான உதாரணங்களின்போதும் அவன் பெயர் கவனமாய் தவிர்க்கப்பட்டது.

அவ்வாண்டின் பள்ளி இறுதிநாள் வந்தது எல்லா மாணவர்களும் தம் ஆசிரியருக்கென பரிசுகள் கொண்டுவந்திருந்தார்கள்.

அதற்குள் ஒரு பெட்டி மட்டும் ஓர் பழைய செய்தித்தாளால் சுற்றப்பட்டிருந்தது. ஆசிரியை சுமதிக்கு அதை பார்த்ததுமே அது டெடியிடமிருந்து தான் வந்திருக்கவேண்டுமென உள்ளுணர்வு சொல்லியது.

முதலில் அதையே பிரித்தார். பிரித்ததும், அதனுள் பாதி உபயோகித்த சென்ட்பாட்டில் ஒன்றும், சில கற்கள் கழன்று விழுந்து பிரேஸ்லெட் ஒன்றும் இருந்தது.

அது டெடி தந்தது என்று புரிந்துகொண்ட முழு வகுப்பறையுமே சிரித்தது. ஒன்றுமே சொல்லாமல் ஆசிரியை சுமதி அந்த வாசனைத்திரவியத்தை தன்மீது பூசிக்கொண்டார். அந்த பிரேஸ்லெட்டை எடுத்து கையில் அணிந்துகொண்டார்.

மெல்லியதாய் ஒரு கால்வாசி புன்னகையுடன் டெடி சொன்னான்". இப்போது உங்களிடம் என் தாயின் வாசம் வருகிறது. இறக்குமுன் அவர் இறுதியாய் பாவித்த சென்ட் இதுதான். இந்த பிரேஸ்லெட்தான் பெட்டியுள் வைக்குமுன் அவர் உடலில் இருந்து அகற்றப்பட்டது!"

ஓராண்டு கழிந்தது. ஆசிரியை சுமதி மேசையில் ஓர் கடிதம் கிடந்தது.

'I have seen few more teachers. But you are the best teacher I have ever seen'. With love Teddy.

ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒரு கடிதம் கிடைத்தது.

அதே வரிகளுடன்.

'I have seen few more teachers. But you are the best teacher I have ever seen'. With love Teddy.

ஆண்டுகள் பல வேகமாய் உருண்டன. அவர்களுக் கிடையேயான தொடர்பு எப்படியோ அறுந்து போனது.

ஆசிரியை சுமதி ஓய்வுபெற்றிருந்தார். பல ஆண்டு களின் பின்னர் அவருக்கு ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. கடிதம் டாக்டர் தியேடரிடமிருந்து.

Mrs. Sumathi

'I have seen many more people in my life. are the best teacher I have ever seen', I am getting married. I cannot dream of getting married without your presence. This is your Teddy.

Dr. Theodore

அத்துடன் போய்வர விமான டிக்கட்டுக்களும் இணைக்கப்பட்டிருந்தன. ஆசிரியை சுமதிக்கு இருப்பு கொள்ளவில்லை. அவரிடம் அந்த சென்ட் பாட்டில் தற்போது இல்லை. பிரேஸ்லெட் பாதுகாப்பாய் இருந்தது. அதை அணிந்துகொண்டு தேவாலயத்திற்குப் புறப்பட்டார்.

அங்கு சென்று பின் இருக்கையொன்றில் அமர முற்பட்டபோது அங்கிருந்த ஊழியர்கள் அவரை எப்படியோ அடையாளம் கண்டுகொண்டு முன் வரிசையில் இருந்த ஆசனம் ஒன்றை நோக்கி அழைத்து சென்றனர்.

அவருக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் எழுதப்பட்டிருந்தது "''MOTHER''.

திருமணம் முடிந்தது. தியோடர் தன் புது மனைவியிடம் ஆசிரியை சுமதியை அறிமுகம் செய்துவைத்தார். இவர் மட்டும் இல்லையென்றால் நான் இன்று இந்த இடத்தில் நின்றிருக்கவே முடியாது தியோடரின் கண்களில் கண்ணீர்.

ஆசிரியை சுமதி, மணப்பெண்ணைப் பார்த்து சொன்னார் டெடி இல்லையென்றால், ஒரு ஆசிரியர் தன் மாணவர்களுக்கு முதலில் ஒரு தாயாய் இருக்கவேண்டுமென்பதை நான் அறிந்திருக்கவே முடியாது"

**செல்லக்குமார்**

# பணையக் கைதிகளாகத் தமிழர்கள்

பெ.மணியரசன்

### தமிழர் புத்தெழுச்சி

தமிழர்கள் புதிய விழிப்புணர்வு பெற்று தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடத்தும் புதிய போக்கு தொடங்கி பத்தாண்டுகள் ஆகின்றன. ஈழத்தில் தன் இன மக்களை அன்றாடம் கூட்டம் கூட்டமாகக் கொன்று குவிக்க இலங்கை அரசுக்கு இந்தியா தோள் கொடுக்கிறது என்பதை அறிந்த பின்னர் தமிழ்நாட்டு இளையோரிடம் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது; எச்சரிக்கை அடைந்தார்கள்.

இந்தியத்தேசியம் - அதனைத் தோள் சுமக்கும் திராவிடம் ஆகிய இரண்டிற்கும் வெளியே நின்று இயற்கையான - தனது சொந்த தமிழினத்தின் தற்காப்பு குறித்து இளைஞர்கள் சிந்திக்கத் தொடங்கினர். அந்த சிந்தனைத் தீ கொழுந்து விட்டெரிவதற்காக தன்னையே எரித்துக் கொண்டான் இளைஞன் முத்துக்குமார்! முத்துக்குமாரைத் தொடர்ந்து 17 பேர் தீக்குளித்தனர்!

தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சி, ஆதிக்ககாரர்களுக்கு மட்டுமின்றி அடிமைப்பட்ட மக்களுக்கும் பயன்படுகிறது. உலகம் ஒரு கிராமமாக சுருங்கிவிட்டது என்றார்கள் ஆதிக்கவாதிகள்! தகவல் தொழில் நுட்பப் புரட்சி ஒரு கிராமத்தை ஓர் உலகம் ஆக்கிவிட்டது என்று நாம் சொன்னோம்! ஒவ்வொரு மனிதரும் ஓர் ஊடகமாக மாறி விட்டார்!

மனித வரலாற்றில் முதல் அறிவுச் சுடரேந் திய தமிழினம் இன்று அரசியலில் அடிமைப் பட்டிருந்தாலும் அறிவாற்றலில் முதல் நிலை பெற்று விளங்குகிறது. தமிழ்நாட்டுத் தமிழர்களும், தங்கள் அறிவால், உழைப்பால், அடையாளப்பட்டு சிறப்புருகி றார்கள்.

இந்திய ஏகாதிபத்தியத்தின் கழுகுக் கண்கள் தமிழ்நாட்டின் மீது முன்பைவிட மூர்க்கமாக வட்டமிடு கின்றன. ஆரியத்தின் அசல் பிரிதிநிதியான பா.ச.க., ஆட்சியில் இருக்கிறது. அதற்கு அடியாள் போல் தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி!

“இம்மென்றால் சிறைவாசம்  
ஏன் என்றால் வனவாசம்  
இவ்வாறாங்கே  
செம்மையெல்லாம் பாழாகி  
கொடுமையே அறமாகித் தீர்ந்தபோது



இரசியாவிலே புரட்சி உண்டானது" என்று பாடினார் பாரதியார்! ஜார் மன்னன் ஆட்சியில் இரசியாவிலே நடந்த அடக்குமுறைகளும் உயிர்பலிகளும் இப்போது தமிழ்நாட்டில் அரங்கேறிக் கொண்டுள்ளன.

முன்கூட்டியே ஒத்திகை பார்த்து குறிவைத்து தூத்துக் குடியில் பதின்மூன்று தமிழர்களை சுட்டுக் கொன்றார்கள். துப்பாக்கிச் சூட்டில் எலும்பு முறிந்து, உறுப்புகள் சிதைந்து தப்பிப்பிழைத்தவர்கள் ஐம்பதுக்கும் மேற் பட்டோர். காவல்துறையின் இரும்புத் தடி தாக்குதலில் படுகாய முற்றோர் பலர்!

அடக்குமுறையின் புதிய வடிவத்தை அரசு அரங் கேற்றியது தூத்துக்குடியில்! அதே வேளை அதற்கான பதிலடியை அறவழியில் ஆட்சியாளர்களுக்கு கொடுத் தார்கள் தூத்துக்குடித் தமிழர்கள்!

## தூத்துக்குடியில் யாருக்கு வெற்றி?

ஆசை ஆசையாய் பெற்று வளர்த்து, படிக்க வைத்து, பெற்றோரால் அழகு பார்க்கப்பட்ட பெண் ஸ்நோலின்! பதினேழு அகவையில் "உயிர்க் கொல்லி ஸ்டெர்லைட் ஆலையை மூடு" என்று உரக்க முழக்கமிட்டு ஊர்வலமாக சென்றாள் என்பதற்காக அவள் வாயில் சுட்டுக் கொன்றது எடப்பாடி அரசு! அக் கொடுமை நடந்த மறுநாள் 23.05.2018 அன்று தூத்துக்குடி மினி சகாயபுரம் சென்று அப்பெண்ணின் பெற்றோரைப் பார்த்து அந்த துயரத்தில் பங்கு கொண்டோம்! ஸ்நோலின் தாயார், பெரியம்மா, சின்னம்மா மூவரும் கதறிய கதறல் நெஞ்சைப் பிளந்தது. ஒற்றை மகள் மீது அவ்வளவு பாசம்!

ஆனால் அவர்கள் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தர மாக மூடாமல் தங்கள் மகளின் உடலை வாங்க மாட்டோம்; அடக்கம் செய்ய மாட்டோம் என்று மறுத்து விட்டார்கள்.

ஆசை மகளின் உடலைப் பெற்று கட்டித் தழுவி அழுது புரண்டு கண்ணியமாக நல்லடக்கம் செய்யத் தானே பெற்றோர் விரும்புபவர். ஆனால் அவர்கள் ஸ்டெர்லைட் ஆலையை மூடினால் தான் மகள் உடலை வாங்குவோம் என்று மறுத்து விட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தி களியாட்டம் போட்டவர்களின் முகம் பேயறைந்தது போல் ஆகிவிட்டது.

தங்கள் அன்புத் தந்தையை, அண்ணனை, தம்பியை, மகனை, மனைவியை கொலைகாரர்களின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலிகொடுத்துப் பதறித் தவித்தவர்கள் "ஸ்டெர்லைட்டை மூடு! பிறகு உடலை வாங்கிக் கொள் கிறோம்" என்று உறுதியாகக் கூறிவிட்டார்கள்!

நான்கு நாள், ஐந்து நாள், ஆறு நாள் என நாட்கள் நகர்ந்தன. எடப்பாடி ஓங்கிக் கத்தினார், "ஸ்டெர் லைட்டை மூடிவிட்டோம்! நிரந்தரமாக மூடிவிட்டோம்! இனி திறக்கவே முடியாது! உடலை வாங்கிக் கொள் ளுங்கள்"!

உயிரிழப்பு பேரிழப்பு; ஈடுசெய்ய முடியாது! ஆனால் இத்தனைக் கொடுமைக்கும் பிறகு யாருக்கு வெற்றி தூத்துக்குடி மக்களுக்கு! இதிலும் மோடியும், எடப் பாடியும் தோற்றுப் போனார்கள்!

போரிலே விழுப்புண் பெற்று மடிவதே எங்களின் மானம் காக்கும் செயல். "குழந்தை நோயினால் இறந்தால் கூட அதன் உடலில் வாளால் கீறி, விழுப்புண் உண்டாக்கி அதன் பின்னரே புதைப்போம்! தாயின் கருவில் இருக்கும்போது சிதைவு ஏற்பட்டு சதைப் பிண்டமாகப் பிறந்தாலும் அதன் உடலிலும் வாளால் கீறி விழிப்புண் உண்டாக்கிப் புதைப்போம்" என்றான் சேர மன்னன் கணைக்கால் இரும்பொறை (புறநானூறு - 74)! அந்த வீர மரபில் வந்த தூத்துக்குடித் தமிழர்கள், ஆட்சி யாளர்கள் சுட்டுக் கொன்ற தங்கள் அருமை உறவுகளின் உடலைக் கூட வாங்க மறுத்துப் போராடி னார்கள்! அறப்போராட்டத்தின் ஆற்றல் இது! மக்கள் போராட்டத்தின் மாண்பு இது!

## புதிய வடிவில் அடக்குமுறை

ஆனால் ஆட்சியாளர்கள் பாடம் கற்கவில்லை; பண்பு காக்கவில்லை! மக்களுக்கு மறுபடியும் பாடம் புகட்டுவது எப்படி? என்னென்ன வகையில் அவர்களை அச்சுறுத்த லாம்? இரவும் பகலும் மக்களை எப்படியெல்லாம் காவல்துறையின் கண்காணிப்பில் வைத்துக் கொள்ள லாம்? புதிது புதிதாக எத்தனை வழக்குகள் போடலாம்; காவல் துறையினரின் நள்ளிரவுக் கதவுத் தட்டலை - ஆள்தூக்கலை எவ்வளவு அதிகப்படுத்தலாம் என்பதில் தான் எடப்பாடி அரசு தீவிரம் காட்டுகிறது. எடப்பாடி அவ்வாறு செயல்படாவிட்டால் மோடி அவரை முதலமைச்சர் பதவியில் உட்கார வைத்திருப்பாரா?

தூத்துக்குடியைக் கொலைக்களமாக மாற்றிய அரசு, மக்கள் அதிகாரம் அமைப்பைச் சேர்ந்த ஆறு தோழர் களைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் வைத்துள்ளது. மக்களுக்கான சட்டப்பணியாற்றும் வழக்கறிஞர் வாஞ்சிநாதனைச் சிறையில் அடைத் துள்ளது. புரட்சிகர இளைஞர் முன்னணித் தோழர்களின் வீடுகளுக்கு சென்று தேடுதல் வேட்டை நடத்துகிறது. நாம் தமிழர் கட்சி தூத்துக்குடிப் பொறுப்பாளர் இசக்கி மீது 36 வழக்குகள் போட்டுள்ளது. அக்கட்சியின் மண்டலப் பொறுப்பாளர் தோழர் வியனரசு தீ வைக்க முயன்றார் எனப் பொய் கூறி அவரைச் சிறையில் அடைத் துள்ளது.

தூத்துக்குடியோடு காவல்துறை நிற்கவில்லை! ஒட்டு மொத்தத் தமிழ்நாட்டையும் அச்சுறுத்துகிறது!

காவிரிப் போராட்டம் தமிழ்நாடு முழுவதும் கடுமையாக நடந்து கொண்டிருந்த நிலையில் ஐ.பி.எல். மட்டைப்பந்து களியாட்டத்தை சென்னையில் 12.04.2018 அன்று நடத்த வேண்டாம் என்று அனைத்து அமைப்பு களும் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய போது, கண்ணாடி இழைத்தடியால் காவல் துறையினர் நடத்திய தாக்குதலில் பலர் படுகாயமடைந்தனர். இயக்குனர் களஞ்சியம், கரூர் இரமேசு ஆகியோர் பல நாள் சென்னை தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். கரூர் ரமேசின் விலா எலும்பு முறிந்தது.

காவல்துறையினர் நடத்திய தடியடி வன்முறையைக் கண்டு நெஞ்சு பொறுக்காத ஓர் இளைஞர் காவலர்

ஒருவரைக் கையால் குத்தித் தாக்கி விட்டார். இந்த ஒரு நிகழ்வை வைத்துக் கொண்டு நாம் தமிழர் கட்சித் தோழர்கள், பொறுப்பாளர்கள் மீது காவல்துறை நடத்தி வரும் பழிவாங்கல் வேட்டை கொஞ்ச நஞ்சமல்ல! இரவு நேரத்தில் சென்று நாம் தமிழர் கட்சி தோழர்கள் வீடுகளில் பெண்களிடம் விசாரணை நடத்துவது, இளைஞர்களைக் காவல் நிலையம் அழைத்து வருவது, சிறையில் அடைப்பது என்பதை வாடிக்கையாக்கிக் கொண்டது காவல்துறை.

நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் மீது பல வழக்குகளைப் போட்டுக் கொண்டே இருக்கிறது காவல்துறை!

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகனை துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லப் போன இடத்தில், தூத்துக் குடி வானூர்தி நிலையத்தில் வைத்து, விழுப்புரம் மாவட்டக் காவல்துறையினர் கைது செய்து, வேனில் ஏற்றி விடிய விடியப் பயணம் செய்து திருக்கோவிலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தினர்.

வழியில் குடிக்கத் தண்ணீர் கூட கொடுக்கவில்லை; சிறுநீர் கழிக்கவும் நிறுத்தவில்லை என்றார் வேல்முருகன். காவல்துறையினரின் இந்த மனித உரிமைப் பறிப்புகளைக் கண்டித்து வேல்முருகன் புழல் சிறையில் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாப் போராட்டம் நடத்தினார் வேல்முருகன்.

இரண்டு மாதங்களுக்கு முன் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தோழர்கள் உளுந்தூர்பேட்டை நெடுஞ்சாலை சுங்கச்சாவடியை தாக்கினார்கள் என்ற வழக்கில் வேல் முருகனை இணைத்து, இந்தக் கைதை அரங்கேற்றி யுள்ளது.

வேல்முருகனை அச்சுறுத்த வேண்டும்; அவமதிக்க வேண்டும்; அதைப் பார்த்து மற்றவர்கள் அஞ்ச வேண்டும் என்பதுதான் காவல் துறையின் உள்நோக்கம்!

தமிழர் கலை இலக்கியப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் இயக்குநர் பாரதிராசா அவர்கள் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்துள்ளார்கள். இயக்குநர் கௌதமன் மீது பல வழக்குகள்! ஐ.பி.எல். மட்டைப்பந்து போட்டி தொடர்பான போராட்டத்தில் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கலந்து கொண்ட கௌதமன் மீது அதற்காக மட்டும் தனித்தனியே மூன்று வழக்குகள்! அவரை புழல் சிறையில் அடைத்துள்ளார்கள்!

தமிழ்த்தேசியப் பேரியக்கக் கிளைகள், தோழர்கள் உள்ள ஊர்களில் காவல் துறையினர் சென்று வீடுகளில் விசாரணை நடத்துகின்றனர். உறுப்பினர் பட்டியல் கேட்கின்றனர். போராடும் பல்வேறு இயக்கங்களின் உறுப் பினர்களை காவல்துறை வீடு வீடாகச் சென்று விசாரிக்கிறது.

கடந்த 10.06.2018 அன்று இரவு 9 மணிக்கு தஞ்சையில் என்னை வழி மறித்துத் தாக்கி விட்டுச் சென்றனர் இரு மர்ம நபர்கள்! அவர்களை இதுவரை காவல்துறையினர் பிடிக்கவில்லை. இது ஒரு வகை மிரட்டல் நடவடிக்கை!

### பசுமைச் சாலையா? பகைமைச் சாலையா?

இப்பொழுது, சென்னை - சேலம் எட்டு வழிச் சாலை தாக்குதல்! பசுமைச் சாலை என்ற பெயரில் ஒரு பகைமைச் சாலை! ஊர்களைக் காலி செய்து, வீடுகளைத் தகர்த்து, வேளாண் நிலங்களைப் பிடுங்கி, எட்டுவழிச் சாலை போட வேண்டிய தேவை என்ன வந்தது? சென்னை - பெங்களூர் சாலை, சென்னை - திருச்சி சாலை போன்றவற்றிற்கு இல்லாத எட்டு வழிச் சாலை, சென்னை - சேலத்திற்கு இடையே ஏன் தேவைப்படு கிறது? ஏற்கெனவே சென்னை - சேலம் இடையே தனித் தனியே இரண்டு நான்கு வழிச்சாலைகள் இருக் கின்றன. சென்னை - வேலூர் வழி! இன்னொன்று சென்னை - உளுந்தூர் பேட்டை வழி!

திருவண்ணாமலை வேடியப்பன் மலை, கவுத்தி மலை, சேலம் சேர்வராயன் மலை, கஞ்ச மலை முதலியவற்றை அழித்து அங்குள்ள இரும்பு, மங்கனீசு போன்ற கனிமங்களை ஜிண்டால், வேதாந்தா, அதானி, அம்பானி போன்ற நிறுவனங்கள் கொள்ளையிட - அதற்காக எண்ணிலடங்கா கனரக ஊர்திகள் இரவும் பகலும் ஊளை யிட்டுச் செல்ல எட்டு வழிச் சாலை தேவைப் படுகிறது!

தமிழ்நாட்டில் ஒரு வழிச்சாலை இல்லாத ஊர்கள் எத்தனை - இருவழிச் சாலையில்லாத நகரங்கள் எத்தனை! கும்மிடிப்பூண்டியிலிருந்து குமரிமுனை வரை சிற்றூர்கள் மட்டுமல்ல, சென்னை உள்ளிட்ட மாநக ராட்சிகள் மற்ற நகரங்களின் தெருச்சாலைகள் என்ன யோக்கியதையில் இருக்கின்றன? இவற்றிற்கெல்லாம் கொடுக்காத முக்கியத் துவம் சேலம் எட்டு வழிச் சாலைக்கு ஏன் வந்தது?

புதிதாகப் போடும் சேலம் எட்டு வழிச் சாலை ஆளும் வடநாட்டுக் கன தனவான்களுக்குரியது! மற்றவை யெல்லாம் அடிமைப்பட்ட தமிழர்களுக்குரியவை! இதுதான் வேறுபாடு!

கடலுக்கடியில் ஏதோ ஒரு யுகத்தில் இராமர் போட்ட பாலம் இருக்கிறது, அதைத் தகர்த்து புனிதம் கெடுக்கும் சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று கூறி - தொடங்கிய வேலையைத் தடுத்தவர்கள் யார்? இதே பா.ச.க. பரிவாரங்கள்தாம்!

ஆனால், மூதாட்டிகள் - முதியவர்கள் - இளைஞர்கள் - ஆண்கள் - பெண்கள் கதறக் கதற அவர்களின் நிலங்களில் எல்லைக் கல் நட்டு, எட்டுவழிச் சாலைக்கு நிலப்பறி செய்பவர்கள் இதே பா.ச.க. பரிவாரங்களும் அவற்றின் பணியாட்களாக வேலை செய்யும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களும்தாம்!

இந்த அநீதியைக் கண்டித்து, அந்த மாவட்டங்களில் பொதுக் கூட்டம் போட முடியவில்லை; ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி இல்லை. திருவண்ணாமலையில் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி அழைப்பு விடுத்த சி.பி.எம். விவசாய சங்கப் பொறுப்பாளர்கள் கைது செய்யப் பட்டனர். கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததுடன், அக்கூட்டத்தில் பங்கேற்க வந்த கிராம மக்களையும் காவல்துறை கைது செய்தது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டில்லிபாபுவையும் வலுவந்த மாகக் கைது

செய்தார்கள். பா.ம.க. தலைவரும், மக்களவை உறுப் பினருமான அன்புமணி இராமதாசுக்கும் அனுமதி மறுத்து, கட்டுப்பாடுகள் பல விதித்து, அவர் மக்களைச் சந்திக்க விட்டார்கள்!

போராடும் உழவர்களுக்கு ஆதரவாக அங்கு சென்ற "சேலம் மக்கள் குழு" - சூழலியல் செயல்பாட்டாளர் பியூஸ் மனுஷ், மாணவி வளர்மதி ஆகியோரைச் சிறையில் அடைத்தார்கள். வளர்மதி வெளியே வந்துவிடக் கூடாது என்பதற்காக, எங்கெங்கோ, எப்போதோ பொதுக் கூட்டங்களில் பேசியவற்றிற்காகப் புது வழக்குப் போடுகிறார்கள். நடிகர் மன்சூர் அலிகானைச் சிறையிலடைத்தார்கள்.

இவர்கள் எல்லாம் அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டி விடுகிறார்கள் என்று எடப்பாடியார் கூறுகிறார். எடப்பாடியார் குற்றஞ்சாட்டும் யாரும் இலஞ்சம் வாங்க மற்றவர்களைத் தூண்டவில்லை; சுட்டுக்கொலை செய்யத் தூண்ட வில்லை! வாழ்வுரிமையைக் காக்கத் தனித்துப் போராடிக் கொண்டிருப்பவர் களுக்குத் துணையாகப் போகிறார்கள். தோள் கொடுக்கப் போகி றார்கள்! மக்கள் வழக்கில் சொல்வதென்றால், இவர்கள் ஆபத்பாந்தவர்கள்! அதாவது "ஆபத்து உதவிகள்"!

இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 19 - வன்முறை யில்லாத போராட்டம் நடத்த அனுமதிக்கிறது. ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊர் செல்ல அனுமதிக்கிறது. கூட்டம் கூட - ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் போராடத் தூண்டி விடுகிறது என்று குற்றஞ்சாட்டுவார்களா? இவர்களின் தலைவர் மோடி, ஒரு வேளை அந்த உறுப்பு 19-ஐ நீக்கினாலும் நீக்கலாம்!

### தமிழ்நாட்டில் போராட்டங்கள் அதிகம் – ஏன்?

சட்டப்பேரவையில் 27.06.2018 அன்று காவல்துறை மானியக் கோரிக்கையில் பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகப் போராட்டங்கள் நடக்கின்றன என்று நடுவண் அரசின் உள்துறை கூறுகிறது என்றார். ஒட்டுமொத்த இந்தியாவில் அரசியல் கட்சிகள், அமைப்புகள், தொழிற் சங்கங்கள், விவசாய சங்கங்கள் மற்றும் பல வகை அமைப்புகள் நடத்தும் போராட்டங்களில் 15 விழுக்காடு போராட்டம் தமிழ்நாட்டில் நடக்கிறது. கடந்த 2017 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 31,269 போராட்டங்கள் நடந்துள்ளன என்று நடுவண் உள்துறை கூறியுள்ளது என்றார்.

தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இவ்வளவு போராட் டங்கள்?

மற்ற மாநிலங்கள் ஏற்க மறுத்த ஸ்டெர்லைட் ஆலையைத் தமிழ்நாட்டில்தான் இந்திய அரசு திணித்தது. மற்ற மாநிலங்கள் மறுத்த கூடங்குளம் அணு உலைகள் தமிழ்நாட்டில்தான் கட்டப்பட்டன. மற்ற மாநிலங்கள் மறுத்த நியூட்ரினோ அணுப்பிளப்பு ஆய்வகம் தமிழ் நாட்டில் பொட்டிபுரத்தில் திணிக்கப்படுகிறது.

இந்தியாவின் கிழக்கு, தெற்கு, மேற்குப் பக்கங்களில் கடல் இருக்கிறது. இக்கடலோரங்களில் பல மாநிலங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு அடுத்தாற்போல், பல நாடுகள் இருக்கின்றன. குறிப்பாக, "பகை நாடு" என்று சொல்லப் படும் பாக்கித்தான், மராட்டிய, குசராத் மாநிலங்களுக்கு அருகில் இருக்கிறது. அங்கெல்லாம் எல்லை தாண்டி மீனவர்கள் மீன்பிடிக்கப் போகிறார்கள்; எப்போதாவது கைது செய்யப்படுகிறார்கள். பின்னர் விடுவிக்கப்படு கிறார்கள். ஆனால் அடுத்த நாட்டு மீனவர்களை சுட்டுக் கொல்வதில்லை! தமிழ்நாட்டு மீனவரை எல்லை தாண்டி வந்து தமிழ்நாட்டுக் கடலில் சுண்டைக்காய் சிங்கள நாடு சுட்டுக் கொல்கிறதே, யார் கொடுத்த துணிச்சல்? இதுவரை 600க்கும் மேற்பட்ட மீனவர்களைச் சுட்டுக் கொன்று விட்டதே இலங்கை கடற்படை, யாருடைய ஒத்துழைப்புடன்? இந்தியாவின் ஒத்துழைப்புடன்!

இவற்றையெல்லாம் எதிர்த்து நாங்கள் போராடு கிறோம்! வாழ்வுரிமையைத் தக்கவைக்கப் போராட வேண்டியுள்ளது தமிழர்களுக்கு!

கொச்சித் துறைமுகத்திலிருந்து தமிழ்நாட்டு வழி யாகப் பெங்களூர் செல்லும் கெய்ல் எரிவளிக் குழாய் கேரளத்தில் சாலை ஓரங்களில் - தண்டவாளங்களின் ஓரங்களில் புதைக்கப்படுகிறது; தமிழ்நாட்டில் மட்டும் விளை நிலங்களின் நெஞ்சைப் பிளந்து புதைக்கப்படு கின்றன! எனவே கேரளத்தில் இதை எதிர்த்துப் போராட்டம் தேவைப்படவில்லை. தமிழ்நாட்டில் தேவைப்படுகிறது!

காவிரி விளை நிலங்களை ஓ.என்.ஜி.சி. ஓநாய்கள் கடித்து குதறி மண்ணை வேதி மண்டலமாக்கி, நிலத்தடி நீரை நஞ்சாக்கிவிட்டன. விளை நிலங்களைப் பாது காக்கவும், குடிநீரை மீட்கவும் தமிழர்கள் போராட வேண்டியிருக்கிறது.

கடலூரிலிருந்து இராமநாதபுரம் வரை விளை நிலங்கள், வீடுகள் நிறைந்த ஊர்கள், ஏரிகள், குளங்கள் உள்ள பகுதிகள் அனைத்தையும் அழித்து பெட்ரோலியம், எரிவளி உள்ளிட்ட ஐட்ரோகார்பன், நிலக்கரி முதலிய வற்றை எடுத்துக் கொள்ளை வணிகம் நடத்த பன்னாட்டு மற்றும் வடநாட்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கி யுள்ளது இந்திய அரசு!

எத்தனை இலட்சம் மக்கள் இடம் பெயர வேண்டியிருக்கும்? அவர்கள் எங்கே போவார்கள்? காலம் காலமாகக் குடும்பத்தோடு குடும்பமாகக் கூடி வாழ்ந்த நிலங்களிலிருந்து அவர்களைப் பிரிப்பது எவ்வளவு பெரிய கொலைபாதகச் செயல்? அந்த மக்கள் கொதித்து எழமாட்டார்களா? இப்படிப்பட்ட கொலைபாதகச் செயல் வேறு எந்த மாநிலத்தில் நடக்கிறது? ஒரிசா, சத்தீசுக்கர் பழங்குடி மக்களின் தாயகங்களை அழித்து வேதாந்தாவும் ஜிண்டாலும் வேட்டையாட இந்தியா அனுமதித்தது. அந்த மக்கள் தாய் மண் காக்க ஆயுதமேந்திப் போராடுகிறார்கள்! நாங்கள் அறப் போராட்டம் நடத்துகிறோம்!

இந்தியாவிலிருந்து பக்கத்து நாடுகளான பாக்கித்தான், வங்காளதேசம் ஆகியவற்றிற்கு ஆறுகள் ஓடுகின்றன.

அவற்றிற்கான ஒப்பந்தங்கள் செயல்படுகின்றன. இந்தியாவுக்குள் நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, மகாநதி போன்ற ஆறுகள் பல மாநிலங்களுக்கிடையே ஓடு கின்றன. அவற்றிற்கான தீர்ப்புகள் செயல்படுகின்றன. ஆனால் எத்தனை தீர்ப்புகள் வந்தாலும் காவிரி மட்டும் கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வராது என்றால் நாங்கள் போராடாமல் என்ன செய்வது?

போராடாமல் அகதிகளாக எங்கள் மண்ணை விட்டு நாங்கள் வெளியேற வேண்டும் என்று இந்தியாவின் உள்துறை எதிர்ப்பார்க்கிறதா? அந்த உள்துறையின் ஒலிப் பெருக்கியாகப் பேசும் எடப்பாடி நாங்கள் காவிரிப் படுகையைவிட்டு அமைதியாக வெளியேற வேண்டும் என்கிறாரா?

பாலாற்றில், பவானியில் மேலும் அணைகள் கட்டி ஆந்திரமும் கேரளமும் தமிழ்நாட்டிற்குரிய தண்ணீரைத் தடுக்கின்றனவே! அந்தத் திருட்டைக் தடுக்கும் ஆற்றல் தமிழ்நாட்டுக் கங்காணி ஆட்சிகளுக்கு இருந்ததா?

தமிழ்நாட்டின் கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தது இந்தியா! அதைத் தடுக்கக் கூடிய ஆற்றலோ, அக்கறையோ, கொடுத்ததை மீட்கக் கூடிய ஆற்றலோ அக்கறையோ தமிழ்நாட்டுக் கங்காணி ஆட்சிகளுக்கு இருந்ததா? இல்லை! எனவே தமிழ் மக்கள் தான் போராட வேண்டியிருக்கிறது!

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் எம் தமிழ் மக்கள் போராடித்தானே திருவண்ணாமலை வேடியப்பன் மலை - கவுத்தி மலைகளை ஜிண்டால் விழுங்காமல் காத்தார்கள்! சேலம் சேர்வராயன் மலையைக் காத்தார்கள்!

## பணையக் கைதிகளாகத் தமிழர்கள்..

இந்திய அரசின் உத்தி வகுப்பாளர்கள் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். இந்திய ஏகாதிபத்திய அதிகாரம் எவ்வளவு இருந்தாலும் தமிழ்நாட்டில் பா.ச.க.வோ அல்லது காங்கிரசோ வெகுமக்கள் கட்சியாக வளர முடியாது. இந்திய ஏகாதிபத்தியத்தின் தமிழ்நாட்டுக் காப்பு அரண்களாக விளங்கி வரும் தி.மு.க. - அ.தி.மு.க. கழகங்களுக்கு வெளியே மூன்றாவது ஆற்றலாக தமிழர்கள் தங்கள் வாழ்வுரிமையை காக்கக் கட்சிச் சார்பின்றி போராடுகிறார்கள். இது புதிய போக்காக வளர்ந்து விட்டது. ஆட்சியாளர்கள் ஏவும் எந்த அடக்குமுறைக்கும் அஞ்சி மக்கள் பின் வாங்குவதாக இல்லை!

இளைஞர்கள், ஆண்களும், பெண்களும், தற்சார் போடு, தமிழின உணர்வோடு தங்கள் வாழ்வுரிமைக் காகவும், தங்கள் தாயகம் மற்றும் பண்பாடு காக்கவும் கருத்துப் போர் நடத்துவதுடன் களப்போராட்டகளிலும் கை கோக்கிறார்கள்!

எனவே தமிழ் மக்கள் மீது தமிழ்நாட்டுக் கங்காணி அரசின் காவல்துறையை ஏவி விட வேண்டும்; அதுவும் போதாது என்றால் இராணுவத்தை அனுப்பி, தாக்குதல் தொடுக்க வேண்டும்; மக்களைப் பணையக் கைதிகள் போல் வைத்துக் கொண்டு, பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டையை விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான் இந்திய அரசின் திட்டம்!

இந்நடவடிக்கை மூலம் கணிசமான தமிழர்கள் தங்கள் ஊர்களை விட்டு வெளியேறி விடுவார்கள், வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களை குறிப்பாக வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் குவித்துத் தமிழர் தாயகத்தைக் கலப்பின மாநிலமாக மாற்றுவது என்பதுதான் இந்திய அரசின் திட்டம்!

## புதிய அடக்குமுறை உத்தி

ஒரு சிக்கலில் மக்கள் தற்காப்புக் குரல் எழுப்பினால், அவர்களை கூட விடாமல் தொடக்கத்திலேயே தடுப்பது, தாக்குவது, தளைப்படுத்துவது என்ற புதிய உத்தியை வகுத்து, தமிழ்நாடு அரசு செயல்படுகிறது. வெளியி லிருந்து ஆதரவு தெரிவிக்க வருவோரைத் தடுப்பது, தளைப்படுத்துவது என்ற புதிய உத்திகளை தமிழ்நாடு அரசு எட்டுவழிச் சாலைப் போராட்டத்தில் கடை பிடிக்கிறது.

சக தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டங்களை ஆதரிக்க வெளியூரிலிருந்து வருவோரை "வெளியார்" என்று முத்திரை குத்தி, அயலாராகக் காட்டுகிறது தமிழ்நாடு அரசு! எட்டு வழிச் சாலை நிலப்பறிப்புக்கு உள்ளானவருக்கு ஆதரவாக நிலம் பறிக்கப்படாத உள்ளூர்க்காரர் வந்தால் கூட, அவரையும் "அயலார்" என்று கைது செய்கிறது எடப்பாடி அரசு!

ஆனால், ஜிண்டால் - வேதாந்தா அகர்வால் - அதானி - அம்பானி போன்ற அயல் இன வேட்டையாடிகளை மண்ணின் மக்கள் போல் பாவித்து, பாதுகாப்பு கொடுக் கிறது; உண்மையான மண்ணின் மக்களைத் தாக்குகிறது.

## எதிர்கொள்வது எப்படி?

நம்முடைய பேராயுதம் மக்கள் தான்! மக்கள் ஆற்றலுக்கு முன் - மக்களின் அறச்சீற்றத்துக்கு முன் மற்றெல்லா ஆயுதங்களும் முனை முறிந்து போகும்! ஆயுதப் போராட்டம் வேண்டாம். மக்கள் அறப் போராட்டம் வெல்லும்!

தமிழர் வரலாறு காணாத அளவிற்கு 50 ஆயிரம் மக்கள் தூத்துக்குடியில் அணியணியாக வந்தார்கள். பதின்மூன்று உறவுகளை பலி கொடுத்த பின்னும் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதில் உறுதி காட்டி வென் றார்கள்.

"**தமிழர் வாழ்வுரிமை காப்போம்! தமிழர் தாயகம் காப்போம்!**" என்ற இலட்சிய முழக்கங்களை எழுப்பு வோம்! சாதி, மதம், கட்சிகள் எங்களைப் பிளவுபடுத்த அனுமதியோம்!

மனிதர்கள் அனைவரும் சமம், தமிழர்கள் அனைவரும் சமம் என்ற தமிழர் அறத்தை முன்னிறுத்துவோம்! தமிழர்கள் ஒருங்கிணைவோம்!

*தமிழர் அறப்போர் வெல்லும்!*

# கோவையில் இனி காசு கொடுத்தால்தான் தண்ணீர்

"தண்ணீர் தனியார்மயமாகப் போகிறது! பெரு நிறுவனங்களின் கையில் தண்ணீர் விநியோகம் செல்லப் போகிறது!" என கடந்த பல ஆண்டுகளாக நாம் எச்சரித்து வந்தோம். இப்போது, அது நடந்தே விட்டது!

கோவை மாநகராட்சியின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு சிறுவாணி, பில்லூர், ஆழியார், வடவள்ளி உள்ளிட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வழியாக சற்றொப்ப நாளொன்றுக்கு 220 எம்.எல்.டி. (அதாவது ஒரு நாளைக்கு 220 இலட்சம் லிட்டர்) தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இனி, இந்தப் பணியை பிரஞ்சு பன்னாட்டு நிறுவனமான சூயஸ் என்ற தனியார் நிறுவனம் மேற்கொள்ளப் போகிறது! அதுவும் அடுத்த 26 ஆண்டுகளுக்கு! சற்றொப்ப 3,100 கோடி ரூபாய் மதிப்பில் இதற்கான ஒப்பந்தத்தைப் போட்டுள்ளது கோவை மாநகராட்சி!

தண்ணீர் தனியார்மயமானால் மக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்பதை உலகிற்கே உணர்த்தும் வகையில், 2000ஆம் ஆண்டு - பொலிவியாவில் நடைபெற்ற தண்ணீர் தனியார்மய எதிர்ப்புப் போராட்டத்தின்போது, இதே சூயஸ் நிறுவனத்தின் பெயர் அடிபட்டதை நம்மில் பலர் அறிந்திருக்கலாம்!

1997இல், மக்கள் நலத் திட்டங்களுக்காக தன்னிடம் நிதியின்றி தவித்த பொலீவியா நாடு, உலக வங்கியிடம் கடன் கேட்டது. தண்ணீரைத் தனியார்மயமாக்க ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் உலக வங்கி கடன் அளித்தது. அந்த நிபந்தனையை நிறைவேற்றும் வகையில், 2000ஆம் ஆண்டு பொலீவியா நாட்டுக்கு இதே பிரஞ்சு நாட்டு நிறுவனமான சூயஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான அகாஸ் டெல் இலுமணி (Aguas del Illimani - AISA) என்ற தனியார் தண்ணீர் நிறுவனம் வந்திறங்கியது.

மக்கள் அன்றாடம் பயன்படுத்திக் கொண்டிருந்த நீரைத் தடுத்து, வேலிகள் போட்டு அடைத்து, காசு கொடுத்தால்தான் தண்ணீர் வரும் என்று மக்களிடம் அட்டைகள் (கார்டுகள்) கொடுக்கப்பட்டபோதுதான் மக்கள் தங்களைச் சூழ்ந்த பேராபத்தை உணர்ந்து, போராடத் தொடங்கினர். பொதுக் குடிநீர்க் குழாய்களுக்குத் தடை விதித்து,

அப்போது, கொச்சபம்பா நகரில் மக்கள் பேரெழுச்சியாகத் திரண்டு சூயஸ் நிறுவனத் தண்ணீர்க் குழாய்களை உடைத்து நொறுக்கி, அந்நிறுவனத்தை விரட்டினர். ஆஸ்கர் ஒலிவிரா என்பவர் அந்த மக்கள் போராட்டத்தின் தலைவராகத் திகழ்ந்தார்.

தண்ணீர் தனியார்மயமாக்கலுக்கு எதிராக நடைபெற்ற இத்தன்னெழுச்சிப் போராட்டம் உலகமயப் பொருளியல் கொள்கைக்கு எதிராக மக்களை அணி திரட்டியதோடு, அந்நாட்டில் ஆட்சி மாற்றத் திற்கே வழிவகுத்தது.

இதே சூயஸ் நிறுவனம், கடந்த 2012 ஆம் ஆண்டு - இந்தியாவின் தலைநகர் புதுதில்லியின் மல்வியா நகர் மாவட்டத்தில்தான், குடிநீர் விநியோ கப் பணியை முதன் முறையாக மேற்கொண்டு, இந்தியாவில் கால் பதித்தது. அதன்பின்பு, பெங்களூர் - கொல்கத்தா உள்ளிட்ட பல நகரங்களின் சில பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகப் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.



க. அருணபாரதி

இப்போது, இதே சூயஸ் நிறுவனத்திற்குத்தான் - சற்றொப்ப 20 இலட்சம் மக்கள் வசிக்கும் ஒட்டுமொத்தக் கோவை மாநகராட்சிப் பகுதிக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தத்தைத் தமிழ்நாடு அரசு அளித்துள்ளது. சூயஸ் நிறுவனத்திற்கு இந்தியாவில் கிடைத்த மிகப்பெரிய "பணி வாய்ப்பு" இது என அந்நிறுவனம் இதைக் கொண்டாடுகிறது!

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மிகப்பெரிய அளவில் தண்ணீர்த் திருட்டு நடைபெறுவ தாகவும், எனவே இருபத்தி நான்கு மணி நேரமும் குடிநீர் விநியோகிக்க மாநகராட்சியால் முடியாது என்றும், எனவேதான் அதைச் செய்ய இந்தத் தனியார் நிறுவனம் அமர்த்தப்பட்டிருப்பதாக மாநகர ஆணையர் விஜய கார்த்திகேயன் தெரிவிக்கிறார்.

இப்புதிய ஒப்பந்தத்தின்படி, ஏற்கெனவே கோவை மாநகராட்சியால் பதிக்கப்பட்டுள்ள அனைத்துக் குடிநீர்க் குழாய்களும் நீக்கப்பட்டு, சூயஸ் நிறுவனத்தின் புதிய குடிநீர்க் குழாய் புதைக்கப்படுமாம். பின்னர், அதில் தானியங்கி மீட்டர் பொருத்தப்பட்டு, அதற்கேற்ப கட்டணம் விதிக்கப்படுமாம்!

மக்கள் கடுமையாக எதிர்த்தபோதும், அதைப் பொருட்படுத்தாமல் - காவல்துறை பாதுகாப்போடு ஒவ்வொரு விளை நிலத்திலும் பூட்சு கால்களோடு இறங்கி - அடாவடித்தனமாக சேலம் எட்டுவழிச் சாலைக்காக நிலப்பறிப்பில் ஈடுபட தமிழ்நாடு அரசால் முடியும்! ஆனால், கோவை மாநகரத்தில் நடைபெற்று வரும் தண்ணீர்த் திருட்டை மட்டும் இவர்களால் "கண் காணிக்கவோ", "தடுக்கவோ" முடியாதாம்? யாரை ஏமாற்றுகிறார்கள்?

தண்ணீருக்கான கட்டணத்தை மாநகராட்சிதான் முடிவெடுக்கும் என்பதால், மக்கள் அது குறித்து அச்சப்பட வேண்டாம் என்று கோவை மாநகராட்சி ஆணையர் கூறுகிறார். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது?

தண்ணீருக்குக் கட்டணம் கேட்டு விரட்டியடிக்கப் பட்டதால் உலக அளவில் பெயர் கெட்டுப் போன சூயஸ் நிறுவனம், இந்தியாவில் சில உத்திகளைக் கையாண்டு வருகிறது. அதாவது, நேரடியாகத் தண்ணீர்க் கட்ட ணத்தை வசூலிக்காமல், "சேவைக் கட்டணம்" என்ற பெயரில் அதை அரசின் மூலமாக வசூலித்துக் கொள்ளும் வேலையைச் செய்து வருகிறது! அதையேதான் புது தில்லியில் இந்நிறுவனம் மேற்கொண்டது.

இதில் சூயஸ் நிறுவனத்துக்குக் கூடுதல் வசதிதான்! ஏனெனில், இது மக்களிடம் கட்டணம் வசூலிக்க அலுவலர்களை நியமிக்க வேண்டியதில்லை. மாநகராட்சி யே தனது அலுவலர்கள் மூலம், தனது அலுவலகத்தின் மூலம் வசூலித்துக் கொடுத்துவிடும்! அதாவது, தனியார் நிறுவனத்தின் கட்டண வசூல் முகவாண்மை நிறுவனமாக அரசின் மாநகராட்சி செயல்படும் என்று பொருள்!

இதன்படி, இயற்கையாகவே சுவையாகவுள்ள சிறுவாணிக் குடிநீரைப் பருகிவரும் கோவை மக்கள், இனி அந்த நீரைப் பருக - எங்கேயோ இருந்து வந்துள்ள "சூயஸ்" நிறுவனத்திற்கு "சேவைக் கட்டணம்" அளிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு!

பெருமளவு பொருள் ஈட்டும் பணக்காரர்களின் அடுக்ககங்களுக்கும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் தண்ணீரை இலாப நோக்கில் விநியோகித்துவிட்டு, எளிய மக்களுக்கு தண்ணீர் அளவைக் குறைக்கும் "மீட்டர்" களைப் பொருத்துவதும், அதற்கும் வழியில்லாமல் அன்றாட வாழ்வையே தெருவோரத்தில் நடத்தும் விளிம்பு நிலை மக்களுக்குத் தண்ணீர் மறுப்பதும்தான் - இதுபோன்ற தனியார் நிறுவனங்களின் வரலாறு!

உள்ளாட்சி அமைப்புகள் செயலிழந் துள்ள கால கட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட கோவை மாநகராட் சியின் 2018 - 2019ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தான், தண்ணீர் விநியோகத்தைத் தனியா ருக்குக் கொடுக்கும் திட்டம் குறித்து தெரிவிக்கப்பட்டது.

அதன்படி கோவையில் நாளொன்றுக்கு 200 எம்.எல்.டி. குடிநீர் 24 மணி நேரமும் கிடைக்க வழிவகை செய்யும் வகையில், தண்ணீர் விநியோகத்தைத் தனியார்மயமாக்க "அரசு மற்றும் தனியார் பங்களிப்பு" மூலம் ரூ. 556.57 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கான பணி அறிவிப்புக் கடிதம், சூயஸ் நிறுவனத்திற்கு 24.11.2017 அன்று வழங்கப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.

கோவை மாநகரத்துக்கு அடுத்த கால் நூற்றாண்டுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கான மிக முக்கியமான இந்த ஒப்பந்தத்தை, மக்கள் பிரதிநிதிகளான உள்ளாட்சி மன்றப் பேராளர்கள் இல்லாத நிலையில், யாரிடமும் கருத்துக் கேட்காமல், அவசர நிலையில் அமைச்சர்களும், மாநகராட்சி அதிகாரிகளும் இதை அறிவிப்பது மிகப்பெரும் ஐயங்களை எழுப்புகிறது.

கோவை மாநகருக்கு வர வேண்டிய சிறுவாணி நீரைத் தடுத்து, கேரளாவில் புதிய புதிய நீர்த்தேக்கங்களை அம்மாநில அரசு கட்டி வருகின்றது. உடனடியாக அதைத் தட்டிக்கேட்டு, அம்முயற்சிகளை முறியடித்து கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர் உள்ளிட்ட வாழ்வாதாரத் தேவைகளுக்குத் தண்ணீரை உறுதிப்படுத்த வேண்டிய தமிழ்நாடு அரசு - இப்படி தனியாருக்குத் தண்ணீர் விநியோக உரிமையைத் தாரை வார்ப்பது - சொந்த மக்களுக்கு செய்யும் துரோகமில்லையா?

தமிழ்நாடு அரசும், கோவை மாநகராட்சியும் உடனடியாக சூயஸ் நிறுவனத்துடன் போட்டுள்ள ஒப்பந்தத்தை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்! தண்ணீர்த் திருட்டில் ஈடுபடும் தனியார் குடிநீர் நிறுவனங்களைக் கட்டுக்குள் கொண்டுவர, மிகப்பெரும் அளவில் கண்காணிப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கோவை மாநகருக்குள் நீரை உறிஞ்சும் தனியார் தொழிற்சாலைகளுக்குத் தடை விதிக்க வேண்டும்!

தண்ணீரைத் தனியார்மயமாக்கும் முயற்சி எந்த வடிவத்தில் வந்தாலும், தமிழக மக்கள் அதை எதிர்த்துப் போராட வேண்டும்!


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



கவிஞர் திரு. பழனிபாரதி அவர்களுடன் முற்றம் ஆசிரியர் விசவனூர். வே. தளபதி அவர்கள்.





V. Arockia Charles Anand
Cell: 96 29 44 44 55 / 96 59 44 44 55

MARIYA ASSOCIATES

Authorised service center : Housing loan, Business loan, Presonal loan, Vechile loan & Insurance, Health insurance, UTI Pan card

No: 10, 11, Karthikeyan Road, Yagappa nagar,
Near KVB ATM, Thanjavur - 613 007

e-mail : mariyaassociate@gmail.com

MUTRAM - Tamil & English Monthly  RNI No. TNBIL/2010/36924.




திண்டிவனம் சரளி கலைக்கூடத்தின் முப்பெரும் விழாவில்
தலைமை சிறப்பு விருந்தினர் திரைப்பட பின்னணி பாடகர் திரு.தீபன் சக்கரவர்த்தி அவர்களால்
குரல்வழி இசை கலைஞர் திரு.ஆறுமுகம் அவர்களுக்கு சரளி கலைக்கூடத்தின் சார்பில்
பலகுரலிசை மணி என விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது மற்றும்
தீபன் சக்ரவர்த்தி அவர்கள் திரைபடத்தில் தான் பாடிய பாடலை இந்நிகழ்ச்சியில்
பாடும் பொழுது குரல் வழி தாளத்தை ஆறுமுகம் அவர்கள் இசைத்து காட்டினார்.



சென்னையில் உள்ள ஸ்ரீருத்ராக்ஷா அகாடமி சார்பில்
10 ஆம் ஆண்டு விழாவில் சாதனை யாளருக்கான விருது வழங்கப்பட்டது
இதில் இசைத் தென்றல் னி.ரீ. விஸ்வநாதன் விருது விழாவில் குரல் இசை மாமுரசு என விருதை
திரு சுரவிந்குமார் அவர்களாள் வழங்கி கௌரவிக்கப் பட்டது.